பக்கங்கள் : பதின்நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 212

# இப்போது நடப்பது யுத்தமே அல்ல; மனிதாபிமான நடவடிக்கையாம்!

## அரசுத் தரப்பில் இப்படியும் ஒருவியாக்கியானம்

கொழும்பு, ஜூன் 27

"இப்போது நாட்டில் இடம்பெறுவது யுத்தமே அல்ல. அப்பாவித் தமிழர்களைப் புலிகளின் பயங்கரவாதப் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் அரசின் மனிதாபிமான நடவடிக்கையே அது. சிலருக்கு அதுவே யுத்தம் போல் தெரிகிறது."

- இப்படி அறிவித்திருக்கின்றது இலங்கை அரசு.

கொழும்பில், அரச தகவல் திணைக் களத்தில் நேற்று இடம்பெற்ற - அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கின்ற - ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அரசுப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான அநுர பிரியதர்ஷன யாப்பா இவ்வாறு அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி விளக்கமளித்தார்.

வடக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறுகின்ற போதிலும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு இல்லை என்பதில் இலங்கை அரசு தெளிவாகவே உள்ளது.

பேச்சு மூலமான அரசியல் தீர்வின் ஊடாகவே இலங்கைப் பிரச்சினையைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு வழமைபோல் இரவு 9மணி தொடக்கமே

யாழ்ப்பாணம், ஜூன் 27

குடாநாட்டில் வழமை போல் ஊரடங்கு இரவு 9மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை நடைமுறையில் இருக்கும் என பலாலி படைத் தலைமையகத்தைச் சேர்ந்த கேணல் விஜயசிங்க நேற்றிரவு தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே 2 ஆம் பக்கத்தில்**

ஆசிரியர்களாக நியமனம் பெறுகின்ற கல்வியியல் கல்லூரி மாணவர்களின் விவரத்தைப் பாருங்கள்

## ஐ.ஓ.சி. டீசலின் விலை மீண்டும் 10 ரூபா குறைப்பு

கொழும்பு, ஜூன் 27

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் (ஐ.ஓ.இ) நேற்று நள்ளிரவு தொடக்கம் அமுலுக்கு வரும் வகையில் டீசலின் விலையை மீண்டும் 10 ரூபாவால் குறைத்திருக்கிறது.

நேற்று முன்தினமும் டீசலின் விலையை 10 ரூபாவால் குறைத்திருந்தது.

இதன்படி ஐ.ஓ.சி. டீசல் ஒரு லீற்றரின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

**கல்விச்சுடர்**

★ 7 ஆம் பக்கத்தில் - க.பொ.த (உயர்தர) வினாத்தாள் தமிழ்-01+கர்நாடகசங்கீதம்-01 வினாத்தாள்கள்

★ 8 ஆம் பக்கத்தில்- தரம் - 5 மாணவருக்கான புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

## இந்திய உயர் அதிகாரிகளுடன் இரகசியமாகப் பேசிய விடயங்களை அம்பலப்படுத்தக் கோருகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 27

இந்தியாவின் மூன்று அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக்குழு இலங்கையில் சமீபத்தில் மேற்கொண்ட இரகசிய பேச்சுகள் குறித்த விடயங்களைப் பகிரங்கப் படுத்துமாறு ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுர குமார திஸநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்திய உயர்மட்டப் பிரதிநிதிகள் குழுவினர் இலங்கையில் மேற்கொண்ட பேச்சுகளின் பின்னர் கூட்டறிக்கை எதுவும் வெளியிடப்படாதமையைச் சுட்டிக்காட்டியுள்ள அநுரகுமார திஸநாயக்க, இவ்வாறான சந்திப்புகளின் பின்னர் கூட்டறிக்கை வெளியிடுவதே வழமை என்றும் தெரிவித்துள்ளார்.

இந்தியக் குழுவினருடனான சந்திப்புக் குறித்து இலங்கை அரசு ஒன்றுக்கொன்று முரணான தகவல்களை வெளியிடுகின்றது என மேலும் தெரிவித்துள்ள ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர், முதலில் சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள இந்தியப் பிரதமரின் பாதுகாப்புக் குறித்து ஆராயப்பட்டதாக அரசு தெரிவித்தது. பின்னர் தேசிய பாதுகாப்புக் குறித்தே பிரதானமாக ஆராயப்பட்டது எனக் கூறப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பாலமோட்டையில் கடுஞ்சமர் 8 படையினர் பலியெனப் புலிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இடையே நேற்று கடுஞ்சமர் நடைபெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

பாலமோட்டையில் இருந்து காலை 8.30 மணிதொடக்கம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை நோக்கி முன்னேற முயன்ற படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர தாக்குதல்களை நடத்தி, பிற்பகல் 3.20 மணியளவில் முன்னேற்ற முயற்சியை முறியடித்தனர் என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இந்தச் சமரில் எட்டுப் படையினர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவிலிருந்து அரசுப் பக்கத்துக்கு பலர் தாவுவாராம்

கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து மேலும் பலர் அரசுடன் இணையவுள்ளனர் என்று அமைச்சர் அனுர பிரியதர்சன 'யாப்பா நேற்றுக் கூறினார்.

இணையவுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வெகுவிரைவில் தெரிவிக் கப்படும் என்று கூறிய அமைச்சர் பரம

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாணவர்கள் தொடர்ந்தும் திருமலையில்

திருகோணமலை, ஜூன் 27

வவுனியாவில் நடைபெறவிருந்த விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காகச் சென்ற யாழ்.மாவட்ட மாணவர்கள் தொடர்ந்தும் திருகோணமலை யில் தங்கியுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து கப்பல் சேவை நடைபெறாத காரணத்தால் அவர்கள் தொடர்ந்தும் திருகோணமலையில் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாளை கப்பல் சேவை இடம்பெறும் என்றும் அப்போது இவர்கள் காங்கேசன்துறை சென்றடைவர் எனத் தெரிவிக்கப்பட் டது.

(அ-01-151)

## மகேஸ்வரன் கொலைச் சந்தேகநபர்கள் மூவர் நேற்று நீதிமன்றத்தால் விடுதலை

கொழும்பு, ஜூன் 27

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த மூன்று சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரத்ன முன்னிலையில் கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளை அடுத்து பிரதான சந்தேக நபரைத் தவிர ஏனைய மூவரையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இங்கிருந்து நாளைக்கே

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கான பயணிகள் கப்பல் சேவை நாளை சனிக்கிழமை இடம் பெறும் என அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

கப்பலில் பயணம் செய்யும் பொருட்டுச் செயலகத்தில் ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்களை பயண ஏற்பாடுக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சித்திரவதைகள் தாராளமாகவே தொடர்கின்றன!

**ஆசிய மனித உரிமைகள் குழு காட்டம்**

கொழும்பு, ஜூன் 27

இலங்கையில் சித்திரவதை நடைமுறைகள் தொடர்பாக மிக மோசமான நிலைமை காணப்படுவதாகத் தெரிவித்துள்ள ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழு, அதனைத் தடுப்பதற்கான அரசியல் உறுதிப்பாடு இங்கு காணப்படவில்லை என்றும் கவலை தெரிவித்துள்ளது.

நேற்றுச் சர்வதேச சித்திரவதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு தான் விடுத்துள்ள அறிக்கையிலேயே ஆணைக்குழு இதனைத் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் அனைத்துப் பொலிஸ் நிலையங்களிலும் சித்திரவதை என்பது ஒரு நடைமுறையாகவே காணப்படுகின்றது. சிறிய குற்றங்கள் தொடர்பான விசாரணைகளாகக் காணப்பட்டாலும், அல்லது கடுமையான குற்றங்கள் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழான குற்றச்செயல் விசாரணை என்றாலும் எங்கும் - எல்லாவற்றிலும் - சித்திரவதை இடம்பெறுகின்றது.

அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக உயர் நீதிமன்றம் ஆராய்ந்த அனைத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரச களஞ்சியத்திலிருக்கும் அரிசி, பருப்பு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.செயலக களஞ்சியத்தில் இருப்பில் உள்ள அரிசியும், பருப்பும் தனியாருக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்தப் பொருள்களை கொள்வனவு செய்ய விரும்பும் தனியார் கடை உரிமை

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தேசிய கல்விக் கல்லூரிகளில் இருந்து ஆசிரியர்களாக நியமனம் பெறுவோர் விவரம்

## ஜூன் 30 மற்றும் ஜூலை 2, 3, 7, 8 ஆம் திகதிகளில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக தேசிய கல்வியியல் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

ஐந்து நாள்கள் நடைபெறவுள்ள இந்த நேர்முகப்பரீட்சைக்கு 257பேர் அழைக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 30ஆம்திகதி மன்னார் வலயக் கல்வி அலுவலகத்திலும் ஜூலை 2ஆம் திகதி கிளிநொச்சி, முல்லைத்தீவு வலயக் கல்வி அலுவலகங்களிலும் ஜூலை 3ஆம் திகதி வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலகத்திலும் ஜூலை 7ஆம்8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மேலதிக மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்திலும் நேர்முகப் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விவரம் வருமாறு:

யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டோர்:

ஜே.பிரேமினா-பருத்தித்துறை, சி. அனற்சுதர்சினி- பண்டத்தரிப்பு, க.சுதாஜினி- சாவகச்சேரி, ப.கஜேந்தினி- சாவகச்சேரி, அ.பவப்பிரியா- யாழ்ப்பாணம், செ.மரியசோபனா- கட்டைக்காடு, பெ.அனுஷ்டி- பாசையூர், க்.சிவப்பிரியா- சாவகச்சேரி, செ.லக்கி - மாதகல், செ.தவலோசினி- கோப்பாய், சோ.சத்தியகலா- ஊர்காவற்றுறை,

த.மகிழ்ராஜன்- கரவெட்டி, ம.நளாயினி - சாவகச்சேரி, ப.நித்தியா- மீசாலை, அ.றோகிதா-பண்டத்தரிப்பு, ந.நிஷாந்தினி- சாவகச்சேரி, ந.ஆனந்தராஜா- இணுவில், வ.சுகந்தா- திருநெல்வேலி வடக்கு, ச.கல்பனா-உடுப்பிட்டி, சு.கமலகரன்- ஏழாலை, பா.ஸ்ரீதேவி- கரவெட்டி, ம.சிவாஜினி- மீசாலை, சி.வின்சனா- வட்டுக்கோட்டை, ரா.சுசிகலா- வல்வெட்டித்துறை, ரா.மேனகா- யாழ்ப்பாணம், ஐ.கோமலா- கைதடி தெற்கு, த.வாசுகி- காரைநகர்.

கு.பிரபாகினி- திருநெல்வேலி, மேகலா- மீசாலை கிழக்கு, க.ஜெயந்தினி- கரவெட்டி, ச.அகிலா- யாழ்ப்பாணம், நா. பிருந்தா- கரவெட்டி, க.தவதாரணி- அல்வாய், ரா.யசோதா- கரவெட்டி, யோ.பிரியதர்ஷினி- சண்டிலிப்பாய், ஜெ.சத்தியரூபி- புலோலி, கா.அபிராமி- கரவெட்டி, அ.அஜந்தன்- கரவெட்டி, ப.சியாமினி- கோப்பாய், பி.சியாமினி - யாழ்ப்பாணம், சி.சிவநந்தினி- தெல்லிப்பழை, போ.சுதர்சினி- நெடுந்தீவு, ந.சுகந்தி- அல் வாய், மு.பிரதீபா- கரவெட்டி மத்தி, நா.வனிதா- வட்டுக்கோட்டை.

கி.மிதுனா- சாவகச்சேரி, தீ.ஸ்ரீரதம்- புத்தூர், த.மோகனராஜ்- அல்வாய், த.இதயா - நீர்வேலி, நீ.சிவரூபி- வரணி, க.நிவேதினி- தெல்லிப்பழை, யோ.குமாரவேலு - மானிப்பாய், அ.மனோரஞ்சினி- சித்தன்கேணி, ப.தாட்சாயனி- கோப்பாய், க.வசுமதி- நீர்வேலி, தி.சசிகலா-சுழிபுரம், சி.கார்த்திகாயினி - கந்தர்மடம், டொ.பியாட்ரிஸ்- உரும்பிராய், து.சுபாஜினி- யாழ்ப்பாணம், சி.நீரஜா - ஏழாலை, சே.அபூர்வபாலன்- கச்சாய் தெற்கு, வி.ரகுபதி-அல்வாய், செள. காந்தரூபன்- பருத்தித்துறை, பா.உமா- அச்சுவேலி, கி.தபேந்திரன் -பருத்தித் துறை, சு.சுரேந்திரன்- கரணவாய் தெற்கு, மூ.சுதாகரன்- மானிப்பாய், சி.அருளானந்தம்- மானிப்பாய்.

சி.சிவசுதன் - சுன்னாகம், சி.புஸ்பகாந்தன்- சித்தன்கேணி, நா.சுஜாந்திரி- வரணி, செ.கோகுலன்- தெல்லிப்பழை, வி.மனோராஜி- மறவன்புலோ, க.சந்திரிகா- தெல்லிப்பழை, சி.குருபரன்- திருநெல்வேலி, க.விமலநாதன்- நாவற்குழி, வே.யோகநாதன்- மட்டுவில் வடக்கு, தெ.வாசுதீசன்- ஆவரங்கால், பா.ஜெயராம்- யாழ்ப்பாணம், ந.நளாயினி - வட்டுக்கோட்டை.

மு.நிஷாலினி- சுன்னாகம், யோ.கேதீசன்- சுழிபுரம், க.ஜமீரா- உரும்பிராய், க.ஜெயதர்சனி- சங்கானை, உ..கோகுலன்- சங்கானை, தி.சிவந்தன்- வல்வெட்டித் துறை, ச.ராஜ்ரூபன்- அச்சுவேலி தெற்கு, தி.பகீரதன்- சுன்னாகம், ம. பிறேம்நாத்- சங்கானை, கி.துஷாந்தி- சங்கானை, மு. அருளினி- தெல்லிப்பழை,

ரா.சந்திரகலா- சங்கானை, ந. சுவிதா- கோண்டாவில், செ. பாமிலா- வரணி, க. வானதி- சாவகச்சேரி, சி.சியோதாரணி- சுண்டுக்குழி, ம.கிறைஸ்டாநேசினி- மல் லாகம், அ. தனு சியா-நீர்வேலி, ம. தாட்சாயனி- சுன்னாகம், சி. கார்த்திகா- மீசாலை, ப. சிவரூபா- ஏழாலை, ம.மிருணாளினி- பருத்தித்துறை, ந.கம்சா- வட்டுக்கோட்டை, ம.யேன்யாழினி- சுன்னாகம், செ.ரதீப்தா- சுன்னாகம், சி.தர்சினி- புலோலி, து.அஜூரன்- கந்தரோடை, செ.கவிதா- சுன்னாகம், வே.கிருஷாலினி- யாழ்ப்பாணம், மோ.கந்தசாமி- மானிப்பாய், பெ.சுபத்திரா- யாழ்ப்பாணம், பா.பாமா-ஆனைக்கோட்டை, ஐ.முருகதாஸ்- ஆவரங்கால், த.ரஜீகரன்- வல்வெட்டித்துறை, செ.மெரின்வத்சலா- மல்லாகம், தி.கேதீஸ்வரன்- வவுனியா, ர.தமிழினி- அளவெட்டி, ரா.திலீபன்- சுன்னாகம், க.உஷாந்தினி- நெடுந்தீவு, கோ.ரஜீவனி-சுன்னாகம், வி.விஷ்ணுகரன்- சுன்னாகம், லை. கஜிதா- கொடிகாமம், யோ.ஜெசிந்தா- உரும்பிராய், ரா.தயாளினி- கரவெட்டி, பு.பரணிதரன்- கோண்டாவில், சி.யசோதா- கரவெட்டி, தி.ஜென்னி வெரோனா- யாழ்ப்பாணம், சி.குகதாசன்- கரவெட்டி, த.ரஜனிகாந்- கரவெட்டி, செ.பகீரதகுமார்- ஏழாலை, சி.வசந்தி- மானிப்பாய், ந.சுஸிவன்- கோண்டாவில், செ.சுசிபா - ஏழாலை, ர.ராஜகாந்தன்- தெல்லிப்பழை, இ.தெய்வசிறி- முல்லைத்தீவு, ரா.கண்ணா - சுன்னாகம், பா.ராதா- திருநெல்வேலி, க.கமல வேணி, நீர்வேல் சி.கார்த்திகா- வட்டுக் கோட்டை, த. தர்மசீலன்- வரணி, செ.சுமங்கலி- தெல்லிப்பழை, செ.தயாளினி- யாழ்ப்பாணம், சோ.றொகாண் ராஜ்- சண்டிலிப்பாய், ஆ.நிஷாந்- எழுது மட்டுவாள், இ.பிரதீபா -கரவெட்டி, க.பத்மலாவண்யம்- சுழிபுரம், வ.ஜெகநா தன்- வவுனியா, ர.பிரதீபன்- கோப்பாய், க.ஜெனிஸ்ரா- உரும்பிராய், வி.ஜஸ்ரீனா- இளவாலை, ல.மேரிலின்சியா- கொழும்புத்துறை, அ.அனித்தா- ஆனைக்கோட்டை, வ.ளெவஸ்ரின்- தோணிக்கல், சா.ஜீவாஜினி- வேலணை, ப.ஆஞ்சலோ பெகின்- உரும்பிராய், தி.வேந்தகுமார்- உடுவில், க.சர்மினி- கோண்டாவில்.

**கிளிநொச்சி, முல்லைத்தீவில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டோர்:**

க.ஜெயராதிகா- பளை, ம.ரசோதினி- கிளிநொச்சி, ம.ஜெயரஜனி- பல்லவராயன்கட்டு, இ.கவிதா- பூநகரி, சி.சிவஜெயந்தி- கணேசபுரம்.சி.சுதாகரன் - கிளிநொச்சி, பா.சித்திரா - முல்லைத்தீவு, அ.லக்ஷ்மீரா - முல்லைத்தீவு, சி.உத யதரணி - கிளிநொச்சி, அ.பிரதீபா - நெடுங்கேணி, நா.ரஜனிகாந் - முல்லைத்தீவு, ரா.லிங்கேஸ் - முல்லைத்தீவு, ஜெ.ருஜீந்திரா - முல்லைத்தீவு, தெ. வாசுகி - முல்லைத்தீவு, கி.அ. சுகிர்தன் முல்லைத்தீவு, மேரி ஆன் ஹில்டா - உடையார்கட்டு, ம.வளர்மதி - மாங்குளம், சே.விஜிதா - முல்லைத்தீவு, சி. சரலா - முல்லைத் தீவு; வ.கபிலகாந்தன் - முல்லைத்தீவு, ஞா. கு.யசோதா - முல்லைத் தீவு,

**மன்னாரில் நேர்மு கப்பரீட்சைக்குஅழைக் கப் பட்டோர்:**

செ. பிறேமலதா - மன்னார். ஜெ.ஜெயரூபினி - மன்னார். செ.சுதர் சினி - தலை மன்னார், அ.மேரி மெற்ற லீன் - உயிலங் குளம், ஜெ.எ.சுவர்ணா - மன்னார், வி.ஜெ.அசினற்றொஜ் - மன்னார், ஐ.றிப்க்கா - மன் னார், சூ.யோ. விமலதாஸ் - மன்னார், நா.ஜெயந்தினி - மன்னார். அ.சா.றொச்சி - மன்னார், ப.ஜெய லச்சுமி - மன்னார், சொ.பெற்றசன் - மன் னார், இ.அ.ஜேமியன் சூசை - மன்னார், அருட்சகோதரி மரியாவிஜித்தா - மன்னார், அருட் சகோ தரி மரியவசந்தி - மன்னார், கு.தே. ஜெனார்த்தனி - மன்னார், மா.சூ. உதயசீலி - வவுனியா, சூ.பிறிமிலா மன்னார்.

**வவுனியாவில் நேர்மு கப் பரீட் சைக்கு அழைக்கப்பட்டோர்:**

வி.விஜயலட்சுமி - வவுனியா, த.சுபாகினி - வவுனியா, த.கஸ்தூரி - வவுனியா, பி.ரூபினிக்கா - வவுனியா, ப.பத்மப்பிரியா - வவுனியா, தி.லா[illegible] - வவுனியா, ச.து[illegible] - வவுனியா, நை.றொசானா - வவுனியா, பா.செல்வக்குமார் - வவுனியா, பஸ்மிலா உம்மாகனி - வவுனியா, க.சசி தனா - வவுனியா, ப.தசிந்தா - வவுனியா, க.சுலக் சனா - வவுனியா, ந.யாளினி - வவு னியா, க.சிவகுமாரன் - வவுனியா, ம.மயூதரன் - வவுனியா, சி.மயூதரன் -வவுனியா, ஜே.பவ ளமலர் - வவுனியா, ந.சுமன் - வவுனியா, வஜெயகாந் - வவு னியா, அ.ரவீந்திரன் -வவுனியா, சு.உமய வன் - வவுனியா, ஜோ. அ.சம்சன் - வவுனியா, பி.ஜெயக் காந் தன்- வவுனியா,

அ.க. மன்சியா - வவுனியா, உ.பிரியதர்சினி - வவுனியா, து.சஜிதா - வவுனியா, ரா.சசிக்குமார் - வவுனியா, ந.சிந்துரா - வவுனியா, லோ.விஜேந்திரன் - வவுனியா, ம.ரகு தீபன் - வவுனியா, உ மீனாகதேசி - வவுனியா, க.நிஷாகரன் - வவுனியா, வே.லலிதா - நெடுங்கேணி, க.புஷ்பிகா - வவுனியா, பா.நிஷாந்தன் - வவு னியா, கு.சிவயோக லக்சுமி - வவுனியா, யோ. சங்கீதா - வவுனியா, ஜோ.டனி வோல்டர் - வவுனியா, ஜே.அகஸ்ரீனா - வவுனியா, க.வினோஜிதா - வவுனியா, சு.ஜெயசீலன் - வவுனியா, சு.முகுந்தன் - வவுனியா, சி.ஜெயந்தினி - வவுனியா, தே.சிறிக்கமலன் - வவுனியா, து.நந் தினி - வவுனியா, ச.கசிந்தாயினி - வவு னியா, ஐ.ஜெகதீஸ்வரி - வவுனியா, க.நகுலேஸ்வரி - வவுனியா, கி.வேதா - வவுனியா, அ.சிவ ரோகினி - வவுனியா, சி.சிவகுமார் - வவு னியா, க.இளங்கோவன் - வவுனியா, ம.ஜங் கரன் - வவுனியா, அருட் சகோதரிறோஸ் மேரி - வவுனியா, கி.மென்டலின் ரஜினி - வவுனியா, மு.றொசலீன் றெஜினா - வவுனியா, அருட்சகோதரி மரியமரிய தாரணி - வவுனியா, ஜே.சந்திரிகா - வவுனியா, த.ராஜாஜி - வவுனியா.

## மரண அறிவித்தல்

### சுப்பர் கணபதிப்பிள்ளை



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் கணபதிப்பிள்ளை 25.06.2008 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பர்-பறுவதம் தம்பதியினரின் அன்பு மகனும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற மயில்வாகனம், தெய்வானைப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோத ரரும், செல்வராசா (நீர்வேலி), செல்வமலர் (கைதடி), செல்லத்துரை (சுவிஸ்), காலஞ்சென்ற செல்வரத்தினம் (ஜேர்மனி) மற்றும் செல்வநாதன் (திருகோணமலை), செல்வராணி (கைதடி), செல்வரஞ்சிதம்(கைதடி), செல்வநாயகம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையாரும், இராஜேஸ்வரி (நீர்வேலி), இராசநாயகம் (கைதடி), ஸ்ரீமகள் (சுவிஸ்), நாகபுஸ்பம் (ஜேர்மனி), செல்வநந் தினி (திருகோணமலை), பரமேஸ்வரன் (கைதடி), சிவஞானசுந்தரம் (கைதடி), லலிதாம்பிகை (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், புவிகாந், குமுதினி (நீர்வேலி), லக்ஸியா (கைதடி), சிம்சோன் (ஜேர் மனி), சங்கவி (திருகோணமலை), கிரிசாந்தி, பிரசாந்தி, பது சாந்தன், சபேசன், தர்சாணியா (கைதடி), சுவர்ணன், சுபாதீனன் (கைதடி), பிரவீன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.06.2008) வியாழக்கிழமை நீர்வேலியில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

தகவல்:
க.செல்வராசா (மகன்)
தொ.பே. 077 9228878

STUDY IN SINGAPORE
மாணவர்களே உங்களுக்கோர் அரிய வாய்ப்பு தவறவிடாதீர்கள்



* முதன்முதலாக இலங்கையில் இருந்து எவ்வித முன்கட்டணமுமின்றி சிங்கப்பூருக்கு 25 நாள்களில் STUDENT PASS (VISA) எடுத்துத்தருகின்றோம்.
* STUDENT PASS ஐ நீங்கள் பெற்றவு டன் சிங்கப்பூருக்குச் செல்லலாம்.
* மிகச்சிறந்த அனுபவம் வாய்ந்த எமது ஊழியர்களின் வழிகாட்டல்.
* நீங்கள் சிங்கப்பூரில் படிப்புடன் கூடிய வேலைவாய்ப்பினைப் பெறலாம் 100% எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.
* உங்களுக்கான தங்குமிடம் ஒழுங்கு செய்துதரப்படும்.
* ஒரு வருடம் படித்தபின் U.K./ AUSTRALIA போன்ற நாடுகளில் மேற்படிப்பைத் தொடரலாம். அல்லது சிங்கப்பூரில் வேலை பார்க்கலாம்.
* உங்கள் வசதிக்கேற்ப/ விருப்பத்திற்குரிய COURSE ஐ எம்மால் பெற்றுத் தரமுடியும்.
* COURSE FEES தவணைமுறையில் செலுத்துவதற்கு எம்மால் ஒழுங்கு செய்து தரப்படும்.
* நீங்கள் சிங்கப்பூருக்கு எமது பிரதிநிதியால் அழைத்துச் செல்லப்படுவீர்கள்.
* விஷேட அம்சம் நீங்கள் கொழும்பிற்கு வருவதற்கு சிரமமாக இருந்தால் எமது E-MAIL ஊடாக உங்கள் சான்றிதழ்களை அனுப்பி வையுங்கள். மூன்று நாள்களில் OFFER LETTER அனுப்பிவைக்கப்படும்.
* WORK PERMIT. (P.R) எடுத்துத் தரப்படும்.

COLOMBO:
GLOBAL ALLIANCE
133/1, HILL STREET, DEHIWALA.
T.P.: 011 4876710, 077 7704420, 077 1600610

SINGAPORE:
GLOBAL ALLIANCE CONSULTANTS,
NO. 105 NORTH BRIDGE ROAD, SINGAPORE- 208816
T.P.: 006593429725

* சகல விதமான பாடநெறிகளுக்கும் எம்மை அணுகுங்கள் நீங்கள் SMS அனுப்பினால் நாங்கள் தொடர்பினை ஏற்படுத்துவோம்.
e.mail: khalid. khan 96 @ yahoo.com.sg

அருள் முருகன் திருமணப் பணியகம்

நீங்கள் எதிர்பார்க்கும் மணமக்கள் எத்தகையவதரர்களாகவிருப்பினும் இவர்கள் இங்குள்ள மிக அதிக அளவிலான மணமக்களிலோ பதிவுகளை மேற்கொண்டு வரும். மணமக்களிலோ இருப்பார்கள். மணமக்கள் விவரங்கள் நேரிலாகும் ஏற்புடையதான பதிவுக்கட்டணம் தவிர்க்கவியலாதா கும். இது "ஒரு திருமண தரகுப் பணியகம் அன்று" திருமணப்பணிகளை திருப்பணிகளாக முன்னெடுத்துச் செல்லும் பணியகம் ஆகும். இங்கு அனைத்துச் செயற்பாடுகளும் நியாயத்தின் பாற்பட்டவையாகும். ஆசிரியர் (B.A Econ - Dp in Edu S.L.T.S.I) ஒருவரின் கல்விச் சேவைக்கு பின்னரான "திருமண திருப்பணிகளும் வளமிகு வாழ்க்கைக்கான தரம் மிகு திருமணங்களும்" அழைப்பு:- 222 9334 இரவு 9.00 மணிவரை இல.03, யாழ்.வீதி, (பெருமாள் கோவில் முன்னெதிர் ரயில் பாதை வீதி) யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவுப் பகுதிக்கு 20 வருட காலமாக மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லை!

## இதனால் பிரதேச மக்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமனம் செய்வதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டு பல வருடங்கள் கடந்துவிட்டன. எனினும் இதுவரை மரணவிசாரணை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வில்லை எனப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நெடுந்தீவுப் பிரதேசத்திற்கு 20 வருடங்களுக்கு மேலாக மரணவிசாரணை அதிகாரி எவரும் நியமனம் செய்யப்படவில்லை. இதனால் அகாலமரணங்கள் மற்றும் விபத்துகளினால் ஏற்படும் மரணங்கள் ஆகியவற்றை விசாரணை செய்வதற்கென சடலங்கள் ஊர்காவற்றுறைக்கே எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதிகாரியை நியமனம் செய்வதற்கென விண்ணப்பங்கள் கோரப்பட்டும் பல வருடங்கள் கடந்துவிட்டன எனவும் சுட்டிக் காட்டப்படுகின்றன. (202-111)

# உரும்பிராய் இளைஞர்களின் சமூக அக்கறையால் திருடப்பட்ட மோட்டர்கள் மீட்கப்பட்டன!

உரும்பிராய்,ஜூன்27

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலைய இளைஞர்கள் எடுத்த முயற்சியினால் திருடப்பட்ட மோட்டர்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

கடந்த நான்கு நாள்களுக்கு முன்னர் குப்பிளான் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளில் மோட்டர்கள் திருட்டுப் போயுள்ளன.

ஏற்கனவே சரஸ்வதி சனசமூக நிலைய இளைஞர்கள் அப்பகுதியைச் சேர்ந்த ஒரு சிலரின் நடத்தையில் சந்தேகம் கொண்டு அவர்களின் நடமாட்டத்தை அவதானித்துள்ளார்கள்.

அதிகாலை வேளையில் குறிப்பிட்ட நபர்களில் ஒருவர் மோட்டருடன் வருவதைக் கண்டு இளைஞர்கள் குறிப்பிட்ட நபரை விசாரித்துள்ளார்கள்.

அந்த நபர் மோட்டர்கள் திருடியதை ஒப்புக்கொண்டதுடன் திருடப்பட்ட வீட்டையும் காட்டியுள்ளார்.

குறிப்பிட்ட நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் ஏனைய இருவரும் இளைஞர்களினால் பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து விற்கப்பட்ட ஏனைய மோட்டரையும் மீட்டு உரியவர்களிடம் கையளித்துள்ளார்கள்.

உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக இளைஞர்களின் இத்தகைய சமூக விழிப்புணர்வான செயற்பாட்டைக் குப்பிளான் பகுதி மக்களும் அயல் கிராம மக்களும் பாராட்டியுள்ளார்கள்.

ஏற்கனவே சரஸ்வதி சனசமூக நிலைய இளைஞர்கள் கசிப்பு போன்ற குற்றச்செயல்களை ஒழிப்பதிலும் குடாநாட்டில் முன்னணிச் செயற்பாடுகளை மேற்கொண்டு தமது பகுதியில் முன்னோடியாகச் செயற்படுகின்றமை சுட்டிக்காட்டிக்கூடியதாகும். (202)

# இலங்கை பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டி: தெரிவுப் பரீட்சை ஜூலை 12ஆம் திகதி

யாழ்ப்பாணம்,ஜூன்27

நாற்பதாவது சர்வதேச பௌதிகவியல், 10ஆவது ஆசிய பௌதிகவியல் ஒலிம்பியாட் போட்டிகளுக்கான தெரிவுப் பரீட்சை அடுத்த மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறை மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இப்பரீட்சை ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பில் பௌதிகவியலை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் உகந்த ஒரு முன்னோடிப் பரீட்சையாகும். ஏற்கனவே விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்காத மாணவர்கள் நேரடியாக பரீட்சை மண்டபத்திற்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பரீட்சைக்கான அறிவித்தல்கள் ஏற்கனவே சகல பாடசாலைகளுக்கும் அறிவித்திருந்தும் சரியான தகவல்கள் உயர்தர வகுப்பு மாணவர்களைச் சென்றடையவில்லை என அறியப்படுவதால், போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு இப்போட்டிக்கான வடமாகாண இணைப்பாளர் கலாநிதி நா.சிவயோகன் கேட்டுள்ளார்.

மேலதிக தகவல்களை யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியற்றுறைத் தலைவரின் அலுவலகத்தில் நேரடியாகவோ, தொலைபேசி மூலமோ பெற்றுக்கொள்ளலாம். (202)

# வேலணை பிரதேச விவசாயிகளை காப்புறுதி செய்ய அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன்27

வேலணை பிரதேச செயலர் பிரிவில் நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சகல விவசாயிகளும் காப்புறுதி செய்யவேண்டும். காப்புறுதி செய்யாது நெற்பயிர்ச்செய்கையில் ஈடுபடக்கூடாது.

இவ்வாறு வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் அறிவுறுத்தியுள்ளார்.

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாய சம்மேளன பிரதிநிதிகளுக்கான கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச செயலர் மேலும் அறிவுறுத்தியதாவது:

கடந்த வருடம் நெற்பயிர்ச்செய்கைக்கு உரிய காலநிலை சீரின்மையால் பெரும்பாலான விவசாயிகள் நட்டமடையவேண்டிய சூழ்நிலையேற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் விவசாயிகள் காப்புறுதி செய்திருந்தால் ஓரளவு நட்டத்தை ஈடு செய்திருக்கலாம்.

எனவே இவ்வருடம் அனைத்து விவசாயிகளும் காப்புறுதி செய்யவேண்டும். அதற்கேற்ற வகையில் அனைத்து விவசாயிகள் சம்மேளனங்களும் விவசாயிகள் காப்புறுதி செய்வதனை உறுதிப்படுத்தி ஊக்குவிக்க வேண்டும் - என்றார்.

இக்கூட்டத்தில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.மீராவும் கலந்து கொண்டார். (202-95)




# செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த நல்லூர், கோப்பாய் கோட்டங்களைச் சேர்ந்த தரம் 6-11 வரையான இடைநிலைக்கல்வி ஆசிரியர்களுக்கு விஷேட கல்வி தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் செயலமர்வும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள ஆசிரிய வளநிலையத்தில் நடைபெறும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இந்தச் செயலமர்வுகள் நடைபெறவுள்ளதாக யாழ்.வலய விஷேட கல்வி ஆலோசகர் தெரிவித்துள்ளார். (202-302)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.கல்வி வலயத்தில் கடமையாற்றும் சித்திர பாட ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் வலயத் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ளன.


தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இதில் கலந்து பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் உள்ள யாழ்.வலய வளநிலையத்தில் நாளை சனிக்கிழமையும் அடுத்த மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமையும் இந்தக் கருத்தரங்கு நடத்த ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

கருத்து வெளிப்பாட்டுச் சித்திரம், "கொலாச்" படம் வரைதல், வெளிக்கள சித்திரம் (Out-door Drawing) தொடர்பான செயலமர்வு இடம்பெறும். (202-302)

# கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்துவதே வங்கியின் நோக்கம்

## இலங்கை வங்கியின் பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் கூறுகின்றார்



மந்திகை,ஜூன்27

கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி கிராமிய அபிவிருத்தியுடன் நாட்டின் பொருளாதாரத்தைச் சுபீட்சமடையச் செய்வதே இலங்கை வங்கியின் பிரதான இலக்காகும். வங்கியுடன் இணைந்து நம்பிக்கை, நாணயத்துடன் செயற்பட்டு வரும் மக்களின் வாழ்க்கை வளம்பெற வங்கி உதவியளிக்கும்.

பருத்தித்துறை, தம்பசிட்டிக் கிராமம் இலங்கை வங்கிக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அதன் அறிமுகவிழாவும் விளையாட்டுப் போட்டியும் அண்மையில் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

மேலைப்புலோலி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சனசமூக நிலையக் காப்பாளர் கே.தவராஜா தலைமை தாங்கினார். தம்பசிட்டி மகளிர் குழுவினர் வரவேற்புக் கீதம் இசைத்தனர். இலங்கை வங்கி கிராம பெயர்ப்பலகையைப் பிரதம விருந்தினர் திரைநீக்கம் செய்து வைத்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில குறிப்பிட்டதாவது:

இலங்கை வங்கி மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. மக்கள் இலங்கை வங்கியுடன் இணைந்து இத்திட்டங்களின் முழுப் பயன்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும். கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் 500 இலங்கை வங்கிக் கிராமங்களைத் தெரிவுசெய்து அக்கிராமங்களை அபிவிருத்தி செய்யவுள்ளது.

பருத்தித்துறை தம்பசிட்டிக் கிராமம் இலங்கை வங்கி கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இக்கிராமமும் பல்வேறு துறைகளில் அபிவிருத்தி செய்யப்படும்.

இலங்கையில் உள்ள 318 இலங்கை வங்கிக் கிளைகளும் வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்டு மக்களுக்கு இலகு சேவைகளை வழங்கி வருகின்றன. இன்றைய யுத்த அனர்த்த காலத்திலும் மக்களுக்கான சிறந்த வங்கிச் சேவைகளை வழங்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இலங்கை வங்கி மக்களுக்கான சேவைகளை வழங்கி வருகின்றது. கருவறை முதல் கல்லறை வரையும் மட்டுமன்றி அதன்பின்னரும் இலங்கை வங்கி சேவையாற்றி வருகின்றது. மக்கள் இலங்கை வங்கியுடன் இணைந்து தமது வாழ்க்கையை வளம்படுத்துவதோடு எமது நாட்டை எதிர்காலத்தில் சுபீட்சம் நிறைந்த நாடாகவும் உருவாக்கவேண்டும் - என்றார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் கே.பி.ஆனந்தநடேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம், சதாவதானி கதிரைவேற்பிள்ளை, சனசமூக நிலையத் தலைவர் கே.குகநாதன், சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.விக்னேஸ்வரன் உட்பட பலர் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

தம்பசிட்டி இலங்கை வங்கிக் கிராம பயனாளிகளுக்கான ஆரம்ப கட்ட விவசாயக் கடன்களும் வழங்கப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. (202-218)







யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள கமநல புலமைப்பரிசில் விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் புலமைப்பரிசிலுக்கென மாணவர்களுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் சேகரிக்கப்பட்ட நிதிக்கான வங்கிக் கணக்குப் புத்தகங்களைவழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

யாழ்.கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்ட பாடசாலை மாணவர்களை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு சைவசமயப் போட்டிகள்

யாழ்.வலயத்தில் உள்ள ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான சைவ விழுமியங்களைப் பேணும் போட்டிகளை நடந்த வலய பணிமனை திட்டமிட்ட ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும்- நல்லூர் கோட்டத்தை சேர்ந்தவர்களுக்கு அடுத்த மாதம் 5ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும்-

யாழ்.கோட்ட மாணவர்களுக்கு 6ஆம் திகதி வைத்தீஸ்வராக் கல்லூரியிலும் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கான வலய மட்டப் போட்டி ஜூலை மாதம் 12ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலைலையிலும் நடைபெற உள்ளது.

இத்தகவல்களை யாழ். வலய பணிப்பாளர் திருமதி அ.வேதநா யகம் தெரிவித்தார். சகல போட்டிகளும் குறித்த தினங்களில் காலை 8.30மணிக்கு ஆரம்பமாகும். (202-302)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை **செல்வி மு.சுசிலராணி**
அவர்களின் அன்புத் தாய்
திருமதி **தங்கம்மா முருகேசு**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நடேஸ்வரக் கல்லூரி, யா/நடேஸ்வரக் கனிஷ்ட வித்தியாலயம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(75749)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்- சண்டிலிப்பாய் கிழக்கு



மேற்படி ஆலயத்தின் புனரமைப்பு வேலைகளுக்காக 12.06.2008ஆம் திகதி ஒரு இலட்சம் ரூபாவை (1,00,000/=) அன்பளிப்பாக வழங்கிய மாண்புமிகு அமைச்சர்
**திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கு ஆலய பரிபாலனசபையினர் நன்றி கூறுவதுடன், அவரது சேவை மேலும் தொடரவேண்டுமெனவும் மனதார வாழ்த்துகின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்,**
**ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்,**
சண்டிலிப்பாய் கிழக்கு (75748)

# IBMS
## புதிய பிரிவுகள் ஆரம்பம்

அனைவருக்கும் கணனிக்கல்வி என்னும் நோக்கில் குறைந்த கட்டணத்துடன் நிறைந்த சேவையை வழங்கிவரும் IBMS நிறுவனத்தில் இணைந்து நீங்களும் குறுகிய காலத்தில் கணனிக் கல்வியில் வல்லுநராகலாம்

| Courses | Duration |
|---|---|
| Dip.in Microsoft office | 3 Months |
| Dip.in Desk Top Publishing | 3 Months |
| Dip.in Internet Techonology | 3 Months |
| Dip.in Hardware Technology | 4 Months |
| Dip.in Computerized Accounting | 3 Months |
| Diploma in Video Editing (Adobe premier pro,VCD Cutter,Video Studio, Nero Burning Software,Pinnacle Studio Fx,Photoshop, Photo Impact,Sound Forge8.0) | 3 Months |

ஆரம்பம்
03-07-2008
06-07-2008 பகல்10.00 மணி

குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்கு Online பிரிவுகளும் ஆரம்பமாகும்



C++ பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்பத்துறைக்கு தெரிவான மாணவர்களுக்கான பிரத்தியேக வகுப்புக்கள் ஆரம்பம்

INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES
# 209, மானிப்பாய் வீதி,வைத்தீஸ்வராச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P 021 222 8232
Branches : நெ.ம.ம.வி வீதி, நெல்லியடி, சங்கத்தானை சாவகச்சேரி


## நல்லூர் விபத்தில் காயமடைந்தவர் மரணம்

சுன்னாகம், ஜூன் 27

நல்லூரில் கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற வான்-மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பூநாறி மரத்தடியைச் சேர்ந்த தி.குருநாதன் என்பவரே உயிரிழந்தவராவார். (38)


## தவறிவிட்டது

கருணாகரன் தர்சன் என்பவருடைய தே. அ. அட்டை இல (901262691V) செட்டித்தெருவுக்கும் கச்சேரி றோட்டிற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டேடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
முகவரி:13A, அரச வீதி,நல்லூர். (75817

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

இடம்: யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்திற்கு அருகில்
நேரம்: காலை 9 மணிக்கு
காலம்: 28.06.2008 சனிக்கிழமை
**பட்டதாரிகள் செயற்குழு.** (75801)

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், பாஷையூரில் வசிக்கும் *எஸ்தாக்கி மரியதாசன்* ஆகிய நான் எனது பெயரை *எஸ்தாக்கி மேரிதாஸ்* என மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

**எஸ்தாக்கி மேரிதாஸ்.**
**பாஷையூர், யாழ்ப்பாணம்.** (75746)

## மக்லியோட் (Mc.Leod) மருத்துவமனை
இணுவில்

### 24 மணித்தியால OPD சேவையும் விடுதிச் (Ward) சேவையும்

இணுவில் மக்லியோட் மருத்துவ மனையில் 30.06.2008 திங்கள்தொடக்கம் 24 மணித்தியால வெளிநோயாளர் OPD சேவை வழங்கப்படும். அது மாத்திரமல்ல அன்று தொடக்கம் இந்த மருத்துவமனையின் விடுதியில் (Ward) நோயாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

M.B.B.S.பட்டம் பெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் இரவில் வெளிநோயாளர்கள், விடுதி சேவைகளையும் மேற்கொண்டு நடத்துவார்கள்.

அத்துடன் நிபுணத்துவ மருத்துவசேவைகள் பின்வரும் மருத்துவ நிபுணர்களால் நிறைவேற்றப்படும்.

1. பொது மருத்துவம்: சிரேஷ்ட பொது மருத்துவ நிபுணர் Senior Consultant Physician - வியாழன் மாலை 3.00 மணி
2. இருதய சிகிச்சை நிபுணர் Consultant Cardiac Surgeon.**Dr.P. லக்ஸ்மன்** - ஞாயிறு நண்பகல் 12.30 மணி
3. பொது சத்திரசிகிச்சை நிபுணர் Consultant General Surgeon, **Dr.S. சிவகுமார்** - சனி மாலை 4.00 மணி
4. மகப்பேற்று நிபுணர் Consultant V.O.G., Dr.திருமதி **B.பவானி** - ஞாயிறு மு.ப 11.00 மணி
5. குழந்தை நோய் நிபுணர் Consultant Paediatrician **Dr.N.** சிறீசரவண பவானந்தன் - ஞாயிறு பி.ப 4.00 மணி

E.C.G.(ஈ.சி.ஜி.) வியாழன் எடுக்கப்படும்
இரத்தப் பரிசோதனைகள் தினமும் எடுக்கப்படும்.

மருத்துவ மேலதிகாரி - Medical Superintendent
மக்லியோட் மருத்துவமனை இணுவில்
தொலைபேசி இலக்கம் 021 222 [illegible]


## ஆங்கிலமொழிக் கற்கைநெறி

யாழ்ப்பாணம், ஜூன் 27

பாடசாலையை விட்டுவிலகியோர் மற்றும் வளர்ந்தோருக்கான அடிப்படை ஆங்கில மொழிக் கற்கை நெறி வாரநாள்களில் மாலை நேரத்திலும் வாரஇறுதி நாள்களிலும் வலிகாமம் கல்வி வலய ஆசிரியநிலையத்தில் நடைபெறவுள்ளது.

200 மணித்தியாலங்களைக் கொண்ட இக்கற்கை நெறிக்கான சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் முகாமையாளர், ஆசிரிய நிலையம்,மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு [illegible] டுள்ளது. (1)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் க.பொ.த. (உ.த.) 2009 கணிதப்பிரிவு மாணவி
**செல்வி பத்மநாதன் சௌமியா**
அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு எமது இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலியினை காணிக்கையாக்குவதோடு, அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலைச் சமூகம்,
யா/இடைக்காடு மகா வித்தியாலயம்,
அச்சுவேலி.

## மரண அறிவித்தல்

### கந்தையா அருளானந்தம்



ஏழாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா அருளானந்தம் (25.06.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- அன்னம்மா தம்பதியரின் புதல்வரும் இராசமணியின் அன்புக் கணவரும் பிறேமானந்தன் (மருத்துவப் பிரதிநிதி, கேமாஸ் பார்மசியூற்றிகல்ஸ்), ஜீவாணந்தன் (பிரான்ஸ்), யுதாநந்தினி (கனடா), கீதாணந்தன் ஆகியோரின் தகப்பனாரும் தேவதர்ஷினி, பாமதி, பிரதீபன் ஆகியோரின் மாமனும் பெனியேல் அபிதே வ், யதுநந்தன் (இந்தியா), அன்றூ கீர்த்தனன், ஜெரமி ஜெயந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.06.2008) வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (75750)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

### தியாகராசா குருநாதன்



பூநாறி லேன், கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தியாகராசா குருநாதன் நேற்று (26.06.2008) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பரமேஸ்வரி - தியாகராசா தம்பதியரின் அன்பு மகனும், தனவதியின் அன்புக் கணவரும், சாருஜன், லயசுயன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூநாறி லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (75816)
தகவல்: தி.இராமநாதன் (சகோதரன்)

### விநாசித்தம்பி கதிரேசு (ஆசாரி)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி கதிரேசு நேற்று (26.06.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி- சிதம்பரம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற கந்தையா-வள்ளியம்மை தம்பதியினரின் மருமகனும், நவரத்தினத்தின்(மணி) அன்புக்கணவரும், பிரேமாவதி, புஸ்பலீலாவதி, சோமாவதி, ரேவதி, பிரபாவதி, தனவதி, உமாதேவி, சாந்தகுமார், சிவகுமார் (ஊர்காவற்றுறை), ராஜ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகநாதன், யோகராஜா, மணிவேலழகன், நமசிவாயம், நகுலேஸ்வரன், காலஞ்சென்ற குருநாதன், தங்கராசா, ஜெயசுதா, சுகந்தி ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2008) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவிணர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*32, 2ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம். (நகுலன்)* (75812)
*தகவல்:* குடும்பத்தினர்

### கார்த்திகேசு கனகசபை (கார்த்திகேசு பில்டிங், நெல்லியடி)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கனகசபை நேற்று (26.06.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு-அரசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், ராஜலட்சுமியின் அன்புக் கணவரும், கபிலன் (லண்டன்), ரேவதி (டென்மார்க்), கணதீபன் (லண்டன்) கதிரகீதன், லதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சசியின் அன்பு மாமனும், சமீரா, கோமியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு பூதவுடல் சோனப்பு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கரவெட்டி மத்தி,*
*கரவெட்டி.* (A)
*தகவல்:* கதிரகீதன் *(மகன்)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதித்தனின் அபார துடுப்பாட்டத்தால் சென்.ஜோன்ஸை வென்றது கொக்குவில் இந்து



வலி.வடக்கு,ஜூன்27

கொக்குவில் இந்துக் கல்லூரி 15 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியின் வீரன் க. ஆதித்தன் ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையேயான சிநேகபூர்வமான போட்டியொன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி 33.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துஷ்யந்தன் 26, ரஜிந்தன் 22 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சதுர்சன் 06 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் சங்கீத் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 11 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் திவாகர் 03 ஓவர்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மற்றும் செந்தூரன் 3.3ஓவர்கள் பந்துவீசி 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் தாருஜன் 05 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 32 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தமதாக்கியது.

ஆதித்தன் நான்கு ஆறுகளும் எட்டு நான்கு ஓட்டங்களும் உட்பட ஆட்டமிழக்காது 71 ஓட்டங்களையும் புவிராஜ் 13, திவாகர் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஹரிதரன் 07 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 15 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கபிலன் 09 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 23 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் மற்றும் துஷ்யந்தன், சிவலக்சன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஜூலை 7இல்

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தால் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான சுற்றுப்போட்டியொன்று அடுத்த மாதம் 7ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் அணிகளை இந்த மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் செயலாளர் ஆர்.ஸ்ரீரமணனுடன் தொடர்புகொண்டு விண்ணப்பங்களையும் சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டுள்ளது. (1-86)

## மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியை தெரிவுசெய்ய ஞாயிறு யாழ்.இந்துவில் பயிற்சி

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்.மாவட்டத்திற்கான கூடைப்பந்தாட்ட அணியினைத் தெரிவுசெய்வதற்கான முன்னோடி நடவடிக்கை யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட உள்ளது.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மாவட்ட வீர, வீராங்கனைகளைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சிகள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறவுள்ளன.

குறிப்பிட்ட தினத்தில் மாவட்ட மட்டத்திலான தெரிவில் பங்குபற்றுவதற்கான வீர, வீராங்கனைகளைப் பயிற்சிக்கு அனுப்பி வைப்பதுடன் கூடைபந்தாட்டச் சங்க நிர்வாக உறுப்பினர்களையும் கலந்துகொள்ளும்படி யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் செயலாளர் ஆர்.ஸ்ரீரமணன் அறிவித்துள்ளார். (1-86)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையேயான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி.
* சங்கானை பிரதேச செயலக அணி எதிர் சாவகச்சேரி பிரதேச செயலக அணி.
* கோப்பாய் பிரதேச செயலக அணி எதிர் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* தெல்லிப்பழை பிரதேச செயலக அணி எதிர் நல்லூர் பிரதேச செயலக அணி.
* பருத்தித்துறை பிரதேச செயலக அணி எதிர் வேலணை பிரதேச செயலக அணி.
* உடுவில் பிரதேச செயலக அணி எதிர் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி.
* மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அணி எதிர் யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணி. (1-86)

★ ★ ★

மந்திகை,ஜூன்27

கரவெட்டி மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15ஆம் ஆண்டு நிறைவையொட்டி கழகத்தால் நடத்தப்படவுள்ள வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளையும் மறுநாளும் மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சியில் பதிவுசெய்யப்பட்ட கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்ற முடியுமென்றும் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் செயலாளர், மைக்கல் விளையாட்டுக் கழகம், மாலிசந்தி, அல்வாய் என்னும் விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (1-218)

★ ★ ★

நல்லூர்,ஜூன்27

அமரர் எம்.சீவரத்தினம், ஏ.தம்பிஐயா ஆகியோரின் ஞாபகார்த்தமாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 'செற்அப்', 'ஓவர்' கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையுமாக இரண்டு தினங்கள் கழக மைதானத்தில் நடைபெறும்.

ஏ.தேவராஜா தலைமையில் அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இப் போட்டிக்கு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பிரதம விருந்தினராகவும் நல்லூர் பிரதேச உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.ரவீந்திரசர்மா சிறப்பு விருந்தினராகவும் பி.பஞ்சலிங்கம் ஜே.பி. கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர். (1-111)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலை வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலம் பிள்ளையார் ஆலய வீதியில் இடம்பெறவுள்ளது.

கணபதி படிப்பத்தின் தலைவர் பூ.அகமணிதேவர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். (1-70)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூன்27

பாடசாலை அணிகளுக்கு இடையேயான 15 வயதுப் பிரிவினருக்கான சிநேகமான கிரிக்கெட் போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன. (1-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

கந்தர்மடம் சிவசக்தி முன்பள்ளியும் அபிராமி முன்பள்ளியும் இணைந்து நடத்தும் 8ஆம் ஆண்டு விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற ஆசிரியர் சி.தெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே.சாந்தசீலன் கலந்துகொள்வார். (1)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க அனுசரணையுடன் யூனியன் அஷ் யூரன்ஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தி வரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சுதுமலை ஐங்கரன் வி.கவும் மயிலிட்டி இளைஞர் ஒன்றிய வி.கவும் மோதுகின்றன. (1-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூன்27

பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறும் சிநேகபூர்வமான 17 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானதில் இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும் மோதுகின்றன. (1-86)

★ ★ ★

வலி.வடக்கு,ஜூன்27

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக அராலி திருமகள் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடன் நடத்திவரும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* அளவெட்டி கலைவாணி வி.க. எதிர் அராலி சில்வெஸ்டார் வி.க.
* அராலி வானவில் வி.க. எதிர் அராலி துணவி சென்.ஸ்டார் வி.க. (1-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

* பி.ப. 3.30 மணி - யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி அணி எதிர் உரும்பிராய் உதயசூரியன் வி.க.
* பி.ப. 3.30 மணி - கொக்குவில் பொற்பதி வி.க. எதிர் உடுப்பிட்டி நவஜீவன் வி.க. (1)



இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் ஆனைக்கோட்டை 'லெவன் ஸ்ரார்' விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. வெற்றிக்கிண்ணத்துடன் 'லெவன் ஸ்ரார்' விளையாட்டு வீரர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம். (படம்: நேசன்)

# மாற்று ஆற்றல் உள்ளோருக்கான விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு,ஜூன்25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையேயான மாற்று ஆற்றல் கொண்ட சிறார்களின் விளையாட்டுப் போட்டிகள் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இப்போட்டிகள் பார்வைக் குறைபாடு உடையவர்கள், உளப்பாதிப்பு, மனவளர்ச்சி குன்றியோர், கேட்டல், பேச்சு, அங்கவீனம் உடையவர்களுக்கென தனித்தனியாக போட்டிகள் இடம்பெற்றன.

போட்டி முடிவில் ஒரு பகுதி 23ஆம் திகதியும் மற்றொரு பகுதி 25ஆம் திகதியும் வெளியாகியிருந்தன. எஞ்சிய முடிவுகள் வருமாறு:

### பெண்கள்

*75 மீற்றர் ஓட்டம்:* ட.டிலக்சனா (சுதுமலை சிந்மய பாரதி வித்தி.), ப.டிசினா (பிரான்பற்று கலைமகள் வித்தி.), சி.சிந்துஜா (ஆர்க்).

*100 மீற்றர் ஓட்டம்:* ப. நிரோஜினி (மானி.சென் ஆன்ஸ்.வித்தி.), ட.டிலக்சனா (சுதுமலை சிந்மய பாரதி வித்தி.), சி.சிந்துஜா (ஆர்க்).

*நின்று நீளம் பாய்தல்:* அ.மதுரா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.), உ.டிலக்சனா (சுதுமலை சிந்மய பாரதி வித்தி.), வ.ரஞ்சினி (பிரான்பற்று கலைமகள் வித்தி.).

*தட்டெறிதல்:* ப.நிரோஜினி (மானி. சென்.ஆன்ஸ்.பாட.), வ.ரஞ்சினி (பிரான்பற்று கலைமகள் வித்தி.), அ.மதுரா (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.).

*குண்டெறிதல்:* ப.நிரோஜினி (மானி. சென்.ஆன்ஸ்.பாட), வ.ரஞ்சினி (பிரான்பற்று கலைமகள் வித்தி.), ப.கோபிகா (ஆர்க்).

### குழு சி-ஆண்கள்

*100 மீற்றர் ஓட்டம்:* ஞா.ரெமிங்டன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.), ரி. தினேஸ்குமார் (மானி.மெமோரியல் பாட), அ.மயூரன் (பிரான்பற்று கலைமகள் வித்தி.).

*நின்று நீளம் பாய்தல்:* கு.துஷ்யந்தன் (வட்டு.இந்துக் கல்லூரி), ச.டிலக்சன் (அளவெட்டி சதானந்தா வித்தி.), செ.சுதர்சன் (ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை).

*தட்டெறிதல்:* ஜெ.அனுசியன் (மானி. மொமோறியல் ஆங்கில பாட.), அ.மயூரன் (பிரான்பற்று கலைமகள் வித்தி.), ஞா. [illegible] (மானி.மொமோறியல் ஆங்கில பாட.).

*குண்டெறிதல்:* யோ.மோகன்ராஜ் (மயிலணி சைவ மகாஜன வித்தி.), அ.மயூரன் (பிரான்பற்று கலைமகள் வித்தி.), ஞா. றொபின்சன் (பண்ணாகம் மெய்கண்டான் வித்தி.)

*ஈட்டி எறிதல்:* யோ.மோகன்ராஜ் (மயிலணி சைவ மகாஜன வித்தி.), ச.டிலக்சன் (அளவெட்டி சதானந்தா வித்தி.).

### பெண்கள்

*நின்று நீளம் பாய்தல்:* பா.ரஜிதா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ரா.சப்திகா (தாவடி இ.த.க. பாட.).

*தட்டெறிதல்:* ம.நிசாந்தினி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

### குழு டி ஆண்கள்

*100 மீற்றர் ஓட்டம்:* செ.பிரதீபன் (மானி. மொமோறி ஆங்கி.பாட.).

*தட்டெறிதல்:* சு.சுதர்சன் (சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தி.), ம.குகராஜன் (தொல்புரம் சைவ வித்தி.).

*குண்டெறிதல்:* சு.சுதர்சன் (சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தி.), ம.குகராஜன் (தொல்புரம் சைவ வித்தி.).

*ஈட்டி எறிதல்:* ம.குகராஜன் (தொல்புரம் சைவ வித்தி.) (1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவசித்தாந்தம் மூன்றையும் ஒன்றாகக் கலந்து யாழ்ப்பாண கல்வி மரபுக்கு உரமூட்டியவர் பண்டிதமணி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலே பிறந்து இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை வாழ்ந்தவர் பண்டிதமணி அவர்கள். 'நல்லொழுக்கமும், ஆரோக்கியமும் உடையவராய்ப் பரீட்சிக்கப்பட்ட பிள்ளைகள் பலரைச் சேர்த்து; அன்னம், வஸ்திரம் முதலியவை கொடுத்து, உயர்வாகிய இலக்கண இலக்கியங்களையும், சைவ சாத்திரங்களையும் கற்பித்தல் வேண்டும். அவர்களுள்ளே தேர்ச்சி அடைந்தவர்களையே உபாத்தியாயர்களாகவும், சைவப்பிர சாரகர்களாகவும் நியோகிக்கலாம்'.

மேற்காட்டிய விஞ்ஞாபனம் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் உள்ளத்து ஊற்று. அவர் வாழ்ந்த காலத்துத் தேவை அவ்வாறு அமைந்திருந்தது. அதனை நிறைவேற்றிய பெருமை நாவலர் காவிய பாடசாலைக்கு உண்டு.

1899 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு பதினொருமணிக்கு மட்டுவிற் பதியில் சின்னத்தம்பியருக்கும் வள்ளியம்மையாருக்கும் நாவலர் பெருமானின் எண்ணக் கருவை நிறைவேற்றச் சிதம்பரம் நடராஜப் பெருமானின் திருவருளினால் ஒருபுத்திரன் தோன்றினார். பெயர் கணபதிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை மூன்றாம் வயதில் தாயை இழந்தார். தந்தையின் பராமரிப்பில் வாழ்க்கை நடந்தது. ஐந்தாம் வகுப்புவரை முறையான பாடசாலைக் கல்வி கிடைத்தது. பின்தடைப்பட்டு விட்டது. மட்டுவிலில் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை அவர்களது குடும்பத்தாருடன் பண்டிதமணிக்கு நெருங்கிய தொடர் பிருந்தது. அவர்கள் கல்விக்காக யாழ்ப்பாணம் சென்று வருவதைப் பார்த்துத்தாமும் கற்கவேண்டுமென்னும் எண்ணக்கரு அவர் மனதில் உதித்தது. அதன்பயனாக 1917ஆம் ஆண்டு பண்டிதமணி அவர்கள் நாவலர் காவிய பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு


## பண்டிதை பொன் பாக்கியம்

சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர், மனேஜர் கைலாசப்பிள்ளை, வித்துவான் சுப்பையாப் பிள்ளை, வித்தகம் கந்தையாபிள்ளை ஆகியோரிடம் பாடம்கேட்டார். 1926 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதராக முதலாம் பிரிவிற் சித்திபெற்றார். 1927ஆம் ஆண்டு கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியும் பெற்றார். பயிற்சி முடிவடைவதன் முன்னரே யாழ்ப்பாணம் செய்த புண்ணிய விசேடத்தினால் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராக நியமனம் பெறுவதற்கு ஒப்புதல் பெறப்பட்டது. அதனால் 1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1959 ஆம் ஆண்டு வரையான முப்பது வருட காலம் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இதனால் நாவலர் பெருமானின் எண்ணக்கரு நிறைவேறத் தொடங்கியது. காரைநகர் அருணாசல உபாத்தியாரை இச்சந்தர்ப்பத்தில் நாம் நினைவுகூரக் கடமைப்பட்டவர்கள். இளம் அப்புக்காத்தரான திரு.சு.இராசரத்தினத்தின் உள்ளத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் மூலம் ஒரு சைவவாசிரிய பயிற்சிக் கலாசாலையை உருவாக்க அவர் அரும்பாடுபட்டார்.

சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையை மையமாகவைத்துப் பல சைவப் பாடசாலைகள் விரைவில் உருவாகத் தொடங்கின. யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சி வரலாற்றில் நாவலர் பெருமான் சைவவித்தியா விருத் திச் சங்க மனேஜர் அப்புக்காத்து சு.இராசரத்தினம், சேர்.பொன்.இராமநாதன், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனார் போன்றோர் என்றும் நினைவு கூரப்பட வேண்டியவர்கள்.

சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகச் சேர்ந்த பிரமச்சாரி பண்டிதர் கணபதிப்பிள்ளை ஆறாது, அமராது கல்விப்பணி புரிந்தார். அவரைச் சுற்றி ஒரு கூட்டம். பயிற்சிக் கலாசாலை வளாகத்திலேயே விடுதியமைத்துத் தங்கியிருந்து கல்விப்பணி புரிந்தார். 1935ஆம் ஆண்டு தொடக்கம் 1946 ஆம் ஆண்டு வரை 12 வருடம் தமிழ், சிங்களம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிக்காவிய பாடசாலை ஒன்றை நடத்தி வந்தார். எத்தனையோ பண்டிதர்களைப் பால பண்டிதர்களை உருவாக்கிய பெருமை பண்டிதமணி அவர்களுக்கு உண்டு. மௌன தவ முனிவராகிய உப அதிபர் திரு. பொ.கைலாசபதி அவர்களோடு சேர்ந்து சைவ சித்தாந்தக் கருவூலங்களைக் கற்றுத் தேர்ந்தார். சிறந்த பேச்சாள ரான பண்டிதமணி அவர்கள் யாவற்றையும் நிறுத்தி விட்டு 1942 ஆம் ஆண்டு தொடக்கம் 1947ஆம் ஆண்டு வரை சைவசித்தாந்தம் கற்றார். பண்டிதமணி பிறந்த குடும்ப மரபும், நாவலர் பெருமானின் கல்விமரபும் சைவசித்தாந்த மரபுகள். ஆதலினால் பண்டிதமணி ஒரு சிறந்த சைவசித் தாந்தியாக விளங்கினார்.

தமிழ் இலக்கணம், இலக்கியம், சைவ சித்தாந்தம்ஆகிய மூன்றும் ஒன்றாகக் கலந்து யாழ்ப்பாணக் கல்வி மரபுக்கு உரமூட்டின. முப்பது வருடகாலம் ஆற்றிய விரிவுரையாளர் சேவை மூலம் பண்டிதமணி பதித்த முத்திரையினால் இந்தநாடு முழுவதிலும் கற்பித்த சைவாசிரியர்கள் தமிழையும் சைவத்தையும் வளர்த்து வந்தனர்.



அதன்மூலம் நாவலர் பெருமானின் இலட்சியம் நிறைவேறியது. பண்டிதமணி அவர்களது கற்பித்தல் உத்தி மிக மகத்தானது. மாணவர்களைத் தம்வசப்படுத்தி அங்காந்து இருக்கச் செய்து தமிழ் மொழியையும் சைவசமயத்தையும்கற்பித்தார். அவரிடம் கற்றவர்கள் அவர் இலட்சியங்களைக் கடைப் பிடித்து வாழ்ந்தனர். வாழுகின்றனர். பண்டிதமணி ஒரு யுக புருஷர் என்றும், சகாப்த புருஷர் என்றும் அறிஞர் பாராட்டினார். அவர் ஒரு அவதார புருஷர் என மாணவர்களாகிய நாம் கூறுகின்றோம்.

இவ்வுலகில் 86 வருடங்கள் 8 மாதங்கள் 16 நாள்கள் வாழ்ந்த பண்டிதமணியவர்கள் 13.03.1986 ஆம் ஆண்டு வியாழக் கிழமை அதிகாலை 4 மணியளவில் இப் பூவுலக வாழ்வை நீத்தார். மூதறிஞர் இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி. கணபதிப் பிள்ளை ஐயா அவர்கள் தமிழ் உள்ளவரை இவ்வுலகில் வாழ்வார்.

**இன்று பண்டித மணியின் நினைவு தினமாகும்.**


**மணப்பெண் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, ரேவதி அல்லது உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த 30-35 வயதிற்கிடைப்பட்ட மணப் பெண் வேண்டப்படுகிறார். பிறந்த திகதி, நட்சத்திர பாதம், குறிப்பு என்பனவற்றுடன் தொடர்பு கொள்ளவும்.

இ.ஜெயராஜசிங்கம்,
காளியவத்தை ஒழுங்கை, உ நிவில் மேற்கு, சுன்னாகம்.

**எம்புறோடிங் றை**



69.00

**கடை வாடகைக்கு**

சுன்னாகம் கே.கே.எஸ். வீதியில் 11 ஆம் இல (மக்கள் வங்கி முன்பாக) உள்ள மாடியுடன் கூடிய கடை தளபாடங்களுடன் வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 021 4591350

(75896)

**சிறப்புத் தள்ளுபடி விற்பனை**

SATS-TECH நிறுவனம் வாடிக்கையாளர்களின் வசதி கருதி இல.11/10 B, ஸ்ரான்லி வீதியில் (மிட்டாஸ் கடை ச்சந்திக்கு அருகில்)
எமது புதிய விற்பனை நிலையத்தை 16.06.2008 இல் திறந்துள்ளதனை முன்னிட்டு 30.06.2008 வரைசிறப்புத்தள்ளுபடி விற்பனையில்!



180 சனல் மற்றும்
106 சனல் பார்க்கக்கூடிய பக்கேஜ்
3/6/10/12/18மாத இலவச
கட்டணத்துடன் ரூபா 8250ல் இருந்து

dishtv

★ மற்றும் அனைத்து கேபிள் T.V உபகரணங்களும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
★ Dish T.V க்குரிய கட்டணங்கள் உடனுக்குடன் செலுத்திக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு

SATS-TECH ENGINEERS

No 11/10B STANLY ROAD
(Near Muddas Kadai Junction) Jaffna
Phone:- 021 2228812

(75337)

No 182, K.K.S. Road
(Kulapitti Church Near) Kokuvil
Phone:- 021 2225908


**5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

தாயின் மடியில் மலர்வு
28.02.1933

தாயக மண்ணில் உதிர்வு
19.06.2003



யாழ்.கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட

**அமரர் கந்தையா சிவராசா (சின்னக்கிளி)**

(முன்னாள் பரிசாரகர் யாழ். மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை)

என்றும் பிரிவுகள் நிரந்தரமானவை கூட
அன்றும் வாழ்ந்த நாள்களில் வசந்த காலமும்
இன்றும் பழகிய காலத்தின் பசுமையான நினைவுகளும்
சென்றும் காலத்தால் வாழ்ந்து கொண்டிருக்கும் என்றும்
கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.
ஓம் சாந்தி!

கட்டுவன்மேற்கு,
பிள்ளையார் கோயிலடி,
தெல்லிப்பழை.

அன்பு மனைவி அன்னரத்தினம்,
பாசமிகு பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

(72647)



**கண்ணீர் அஞ்சலி**

எமது நிறுவனத்தின் முன்னாள் அதிபரும் எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவருமான
கலாநிதி
**செல்லப்பா ஜெயரத்தினம்**
அவர்களின் பிரிவால் தவிக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்லூரி
விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.

அதிபர், உபஅதிபர், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாணவர்கள்

(75734)

### நெடுந்தீவு அபிவிருத்தி மையத்திற்கு கட்டடம்

நல்லூர்,ஜூன்27

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்திற்கென நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

அதற்கென நெடுந்தீவு மத்தி, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கஸ்பார் செல்வம் பரணி ஒரு காணியொன்றை அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக அபிவிருத்தி மையத்தின் தலைவரும் நெடுந்தீவு தென்னிந்திய திருச்சபைக் குருவுமான அருட்திரு. ஜோண் செல்வம் தெரிவித்தார். (202-111)

**நூல் வெளியீடு**

அருட்பணி அருளம்பலம் ஸ்ரீபன் அடிகளாரால் எழுதப்பட்ட இறை விழுமியம் என்னும் மலர் நாளை 28.06.2008 (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு முரண்பாட்டு கற்கைக்கான ஆய்வு நிலையத்தில் (யாழ்.கிறிஸ்துநாதர் ஆலயம், யாழ்ப்பாணம், ஈஸன்ஸ‍ீக்கு அருகாமையில்) கொழும்புப் பேராயர் அதி.வண. டுலிப். டீ.சிக்கேரா அவர்களால் வெளியீடுசெய்து வைக்கப்படவுள்ளது. இவ்விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்பணியாளர்: அருளம்பலம் ஸ்ரீபன்
பங்குத்தந்தை, பரியாகோபு ஆலயம், நல்லூர்.

(72647)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2008
# தமிழ் - 01
ஆக்கம் :- பிறைட் நிறுவன ஆசிரியர்குழு

கடந்த 25.06.2008 இன் தொடர்ச்சி......

02. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கையில் இருக்கும் கோரைப்பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்சன் கொடுக்கப்படாததால் அது மத்தியில் இரண்டாகக் கிழிந்து ஒரு கோடியில் மட்டும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால் முதலில் உதறித்தரையில் போட்டுவிட்டுக் கிழிந்துகிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்கவேண்டும். அதுதான் பூர்வாங்கவேலை. பின்பு விடுதலைபெற முயற்சிக்கும் அதன் கோரைக்கீற்றுக்கள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ அல்லது மனைவியின் புடை வையையோ அல்லது குழந்தையின் பாவாடையையோ எதையாவது எடுத்து மேலே விரிக்கவேண்டும். வீட்டின் பாகவசதியும் விசித்திரமாக இருந்தது. முன்பக்கம் ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்குப்புறம் எங்கோ பல கட்டுக்கள் தாண்டி மற்றொரு அறை. அதுதான் சமையலறை வகையறாவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச இவை எல்லாவற்றுக்கும் பொது இடம் முதலில். முருகதாசர் பொருளாதார நிலையை உத்தேசித்து அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால் தமக்கும் சகதர்மினிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை. மேலும் அவர் யோசிக்கக் கூடியவரும் அல்லர்.

அ) இப்பகுதியில் விவரிக்கப்படும் முருகதாசரின் வாழ்க்கைநிலை யாது?

ஆ) "சகதர்மினிக்கும் தமக்கும் இடையில் இப்படி நிரந்தர பிளவு இருக்கும் என்று யோசிக்கவில்லை" என்பதிலிருந்து முருகதாசரின் நிலையையும், கதைநிகழ் களத்தையும் ஆசிரியர் எவ்வாறு தொடர்புபடுத்துகின்றார்?

இ) இவரது நிலையை ஆசிரியர் எவ்வாறு சித்திரிக்கின்றார் என்பதைச் சுருக்கமாகக் கூறுக.

பகுதி - II

03. சான்றாண்மை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் சால்பிற்குரிய நலங்கள், சால்பின் சிறப்பியல்புகள் என்பன பற்றிக் கூறியுள்ளவற்றைத் தொகுத்துத் தருக.

04. "திருவடி சூட்டுப் படலத்தின் ஊடாக கம்பர் பல்வேறு அறக்கருத்துக்களை எடுத்துக்கூறியுள்ளார்." இக்கூற்று பொருத்தமானதா? இல்லையா? என்பதை ஆதாரங்களுடன் நிறுவுக.

05. "மாணிக்கவாசகர், தாம் வாழ்ந்தகால இலக்கிய சூழலையும் கருத்திற்கொண்டு பல்வேறு இலக்கிய வடிவங்களைக் கையாண்டு திருவாசகத்தைப் படைத்துள்ளார்." இக்கூற்று பொருத்தமானதா என ஆராய்க.

06. "தமிழ்ச் சிறுகதைகளில் பல்வேறு பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு தமிழ்ச் சிறுகதை உலகு பொலிவுடன் திகழ வழிவகுத்தவர் புதுமைப்பித்தன்." இக்கூற்று பொருந்துமா?

07. "நாகம்மாள் குடும்ப கௌரவம், ஒற்றுமை என்பவற்றின் மீது அக்கறை கொண்டவளே. மணியக்காரர் போன்றோரின் தூண்டுதலே அவள் பாகப்பிரிவினையில் ஈடுபடக் காரணம்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை அல்லது பொருந்தாமையை உதாரணங்களுடன் விளக்குக.

## விடைக்குறிப்புகள், பகுதி - 1

01.

1) அ. சாவா மருந்தாகிய தேவர்க்குரிய அமிர்தம் தெய்வத்தாலோ, தவத்தாலோ கிடைத்தாலும் அதனை இனியது எனக்கருதி தனித்து உண்ணாதவர்; யாரோடும் கோபம் கொள்ளாதவர்; பிறர் அஞ்சத்தகும் துன்பத்துக்குத் தாமும் அஞ்சி, அதனை நீக்குதற்குச் சோம்பியிராதவர்; உலகம் முழுவதும் தமக்குக் கிடைப்பதாயினும் மேற்கொள்ளாதவர்; மனக்கவலையற்றவர்; இத்தன்மைகளுடைய மாட்சிமைப்பட்ட குணங்கள் உடையவர்கள் தமக்கென எதுவும் செய்யார்; பிறர் நன்மைக்காக விடாமுயற்சியோடு முயல்வர். இத்தகைய சான்றோர் இருப்பதனாலேயே இவ்வுலகம் சிறப்புடன் வாழ்கிறது.

ஆ. பகிர்ந்துண்டல், முனிவின்மை, அஞ்சாமை, சோம்பலின்மை, புகழில் விருப்பு, பழியில் வெறுப்பு, கவலையின்மை முதலிய பண்புகள்கொண்ட சான்றோர் தமக்கென எதுவும் செய்யாது பிறர்க்கென உழைக்கும் உண்மையான இயல்பு உடையவராதலே அவர் பெருந்தகுதிக்குக் காரணமாகும்.

2) அ. இறைவா! உன்னருள்பெற்ற நபிகளில் ஒருவர், என்னை மதியாது நான் இருப்பதை உணராமல் தமது நால்வகைப் படைகளுடன் விண்ணிலே எனது சிகரத்தின் மேலே விரைந்து பறந்து செல்கின்றார். இவ்விடத்தில் இறங்கி உன்னைத் தொழவில்லை. திக்று செய்யவில்லை. இதனோடில்லாமல் கடல் சூழ்ந்த உலகினைக் காக்கும் அரசர்க்கெல்லாம் அரசரே இவ்வாறு தம் கடமையை மறந்தால் என்ன செய்வது எனக்கூறி என்னைச் சூழ்ந்துள்ள இடங்கள் எங்கும் உனக்கு இணையாக வழிபாட்டுக்குரிய உருவச்சிலைகள் அமைத்து இங்குள்ள கொடியோர் பல விதமாக வழிபாடு செய்கின்றனர். அக்காரணத்தாலும் அழுதான்.

ஆ. அல்லாஹ்வுக்கு இணையாக வழிபாட்டுக்குரிய உருவச்சிலைகள் அமைத்த இங்கு உள்ள கொடியவர்கள் பலவித வழிபாடு செய்கின்றனர் என்று கூறி, இறைவன் அருளைப் பெற்ற கஃபாவே அழுகின்றது. காரணம், அல்லாஹ்வுக்கு இணையாக எதுவுமே இல்லை. அப்படியிருக்க கொடியவர்கள் உருவச்சிலை அமைத்து வழிபாடு செய்கின்றார்களே. அதற்காகத்தான் பெருமையும் சிறப்பும் வாய்ந்த கஃபாவே அழுகின்றது. இதிலிருந்து இறைவன் அல்லாஹ்வின் மகிமை வெளிப்படுகின்றது.

3) அ. "குற்றமில்லாத உயர்குடியிலே ஒத்துவாழும் கடப்பாட்டினை உடையோம்" என்று கூறுவோர், தமக்கு வறுமையுண்டான காலத்து பிறரை வஞ்சிக்க நினைத்து தமது சான்றாண்மைக்குப் பொருந்தாதனவான செயல்களைச் செய்யமாட்டார். அவசியமாய்ச் செய்யவேண்டிய செயல்களாய் இருப்பினும் அச்செயல் களாலேயே தாம் பிறந்தகுடிக்கு இழிவு வருமானால், அவற்றைச் செய்யாது தவிர்க்குக. தனது உள்ளத்தைப் பிற கவர்ச்சியில் ஈடுபடுத்தாது தம்மைக் காக்கும் நிலையுடைய நல்ல பெண்களைப்போல ஒருவன் தனது நிலையிலிருந்து தளராது ஒழுகினால் பெருமைக்குணம் உண்டாகும். எவரிடத்திலும் அன்பு, பழி, பாவங்களைச் செய்யக்கூடும் நாணம், ஒப்புரவு, இரக்கம், உண்மை என்ற ஐந்தும் சார்பு என்னும் கட்டடத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

ஆ. வறுமையானது எப்போதும் நிலையின்றி அசையும் தன்மையுடைய நீர் போன்றது. இப்படி நீர்போல வறுமை வந்ததும் முன்பு கைக்கொண்ட ஒழுக்கத்தினின்றும் ஈடாடிவிடுதல் உயர்குடிக்கு இல்லை. அதாவது, வறுமைக்காலத்திலும் தமது இயல்பினின்றும் வேறுபடமாட்டார்கள்.

4) அ. தம்பியாகிய இலக்குமணனைப் பார்த்து இவ்வாறு சொல்லி பரதனது வருகையை எதிர்பார்த்து நின்றான். மிகுந்த தனது சேனையை பிறகு கொணர்ந்து வரட்டும் என்று சொல்லி தன்னின்று பிரிதலில்லாத அன்பையுடைய தனக்குத் துணைவனான தம்பியாகிய சத்துருக்கரும் தானுமாக முற்பட்டு வந்தான்.

தொழுதபடி உச்சிமேல் வைத்துக் கூப்பிய கைகளையுடையவனும்; தளர்ந்த உடம்பை உடையவனும்; இடைவிடாது புலம்புதலான் பொலிவிழந்த கண்களையுடையவனும் துன்பத்தின் வடிவம் இதுதானென்று எழுதிக்காட்டின உருவத்தை ஒத்துவருபவனுமான பரதனை எல்லாவற்றையும் உணர்ந்த திருவுள்ளத்தையுடைய இராமபிரான் முடிமுதல் அடிவரையிலும் நன்றாகப் பார்த்தான்.

ஆ. பரதன் தனது நிமிர்ந்த மிகுந்த சேனையை பின் கொணர்வாயாக என்று படைத்தலைவன் சுமித்திரனுக்கு நியமித்துவிட்டு முன்செல்கின்றான். [illegible]னத்தில் ஆடம்பரத்தோடு செல்லுதல் முறையல்ல. ஆகையால் பரதன் சேனையை நிறுத்திவிட்டு தம்பியுடன் முன்செல்கின்றான் என்ற பொருட்சிறப்பு. "பரதனு நிமிர்ந்த சேனையைப் பின்றருகென்றுதன் பிரிவில்" என்னும் வரிகள் மூலம் விளக்கப்படுகின்றது.

02.

1) அ. மானாகப்போடி இறந்ததை தந்திமூலம் அறிந்து மனவேதனையுடன் சுற்றம் காரில் வந்து அந்திவரைக்கும் இருந்து அழுதுபோனார்கள். அவர் உயிரோடு இருக்கும் வரை இந்த மானாகப்போடியாரின் புகழ் புலப்படவில்லை.

ஆ. எட்டுநாட்களாக உணவு ஏதும் குடலுக்குள் செல்லவில்லை என்று புழுங்கல் அரிசி அவித்த வெந்நீரைப் பருக்கும்போது அவர் உயிர் போகிறது. அப்போது வள்ளியம்மை ஐம்பது ஆண்டாய்த் தன்னை அனுபவித்துக்கொண்டதற்கும், கடைசியில் ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்ததற்கும், கடைசியில் மானாகப்போடியாருக்காக இரவுபகல் பாராது கண்விழித்து அவரது குறைகளை காதுகொடுத்துக் கேட்டதற்கும் பதிலாக ஒரு வார்த்தைகூடப் பேசவில்லையே என்று புலம்புகின்றார்.

இ. மானாகப்போடியாரின் நோயினால் வள்ளியம்மை நாய்படாப் பாடுபட்டது என்பது உண்மைதான். இருந்தும் வள்ளியம்மைக்கு ஓர் ஆனந்தம். ஏனெனில், மானாகப்போடியாரின் புகழ் உயிருடன் இருக்கும்போது புலப்படவில்லை. ஆனால், இறந்தபிறகுதான் எக்கவுண்டன், எஞ்சினியர், வைத்தியகலாநிதிகள், வர்த்தகர், பேராசிரியர் என்ற அவருடைய சொந்தம் புலப்பட்டு ஊரார் விரலை மூக்கில் வைத்து வியந்தனர்; இந்தவகையில் வள்ளியம்மைக்கு ஆனந்தம் ஏற்பட்டது.

2) அ. இவ் உரைநடைப்பகுதி முருகதாசரின் வாழ்க்கையில் வறுமை தாண்டவமாடுவதைப் புலப்படுத்துகிறது.

ஆ. சகதர்மினிக்கும் தனக்கும் இடையில் இப்படி நிரந்தரப்பிளவு இருக்கும் என்று யோசிக்கவில்லை என்பதிலிருந்து முருகதாசரின் வறுமை நிலையாகிவிட்டதை ஆசிரியர் கதைநிகழ் களத்தோடு தொடர்புபடுத்துகின்றார். அவர் தனது சகதர் மினியை அவசரத்திற்குச் சந்திப்பதாக இருந்தால், பல கட்டுக்களைத்தாண்டி சமையலறை சென்று சந்திக்கவேண்டும். அவருக்கு வேறு ஒரு வசதியான வீடு எடுக்க பணவசதி இல்லை. இதனால் சகதர்மினிக்கும் அவருக்கும் இடையில் நிரந்தர பிளவு இருக்கின்றது.

இ. "நெடுநாள் உழைத்தும் பென்சன் கொடுக்கப்படவில்லை" என்று கூறுவதில் இருந்தும், "தனக்கும் சகதர்மினிக்கும் இடையில் இப்படி நிரந்தரப்பிளவு இருக்கும் என்று யோசிக்கவில்லை" என்பதிலிருந்தும் இவரது வறுமை நிலையை ஆசிரியர் சித்திரிக்கின்றார்.

பகுதி - II

03. பல நற்பண்புகளாலும் நிறையப்பெற்று அவற்றை ஆளும் தன்மையினைத் திருவள்ளுவர் சான்றாண்மை எனக் கூறுகிறார். இதனைச் சால்பு எனவும் குறிப்பிடுவர்.

"குணநலம் சான்றோர் நலனே; பிறநலம் எந்நலத்து உள்ளதூஉம் அன்று"

சான்றோரின் நலம் என்பது குணநலங்களாகும் உயர்ந்த நலத்தையே குறிக்கும். அது தவிர்ந்த ஆடை, அணிகள், குடிநலம், கல்வி போன்றவற்றால் அமையும் நலம் நலமாகாது. தமக்குத் தகுதியானது இது என சான்றாமையைக் கடைப்பிடித்து ஒழுகுபவர்களுக்கு நல்லவை என்று சொல்லப்படுகின்ற குணங்கள் யாவும் இயல்பாகவே அமைந்திருக்கும்.

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)

## க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை - ஓகஸ்ட், 2008
# கர்நாடக சங்கீதம் - 01
ஆக்கம் :- யாழ். கல்வி வலயம்

## கர்நாடக சங்கீதம் - 01, பகுதி - 1

பகுதி 1 இற்கும் ஏனைய பகுதிகள் ஒவ்வொன்றிலும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடைதருக.

01. 72 மேளகர்த்தாக்கள் பற்றி முதன்முதலில் எந்தநூலீல் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது?
02. அதீத ஙஹ்ரகம் என்றால் என்ன?
03. சப்த ஸ்வரங்களை ஆரோகணத்திலிருந்து அவரோகணம்வரை உள்ளதாய் உள்ள ஜன்னிய இராகத்தின் பெயர் தருக.
04. உபாங்க இராகத்தின் எதிர்ப்பதத்தைத் தருக.
05. மித்ர இராகங்கள் என்றால் என்ன?
06. அம்ஸ ஸ்வரம் என்றால் என்ன?
07. வாத்திய பிரபந்தம் என்றால் என்ன?
08. அதிகநேர ஆலாபனைக்கு இடம்கொடுக்காத இராகத்தினை எவ்வாறு அழைப்பர்?
09. இசைநாடகத்தில் காணப்படும் உருப்படி ஒன்று தருக.
10. இந்தியாவில் இசைவளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள மூன்று நிறுவனங்களின் பெயர்களைத் தருக.
11. அர்த்த கம்பித இராகம் என்றால் என்ன?
12. சதுஸாதியில் வாக்கேயக்காரரின் முத்திரை காணப்படும் அங்கத்தின் பெயர்களைக் கூறுக.
13. முல்லைப்பண் குறிக்கும் இராகம் எது?
14. ஹ்ரக ஸ்வரம் என்றால் என்ன?
15. ஆலாபனை, கானம் இரண்டிலும் பிரகாசிக்கும் இராகத்தினை எவ்வாறு அழைப்பர்?
16. 10ஆவது, 11ஆவது சக்கரங்களிலுள்ள விவாதி மேளங்களின் எண்களைத் தருக.
17. மங்களம் பாடுவதற்குரிய இரண்டு இராகங்களைத் தருக.
18. கல்பித மேளங்களின் எண்ணிக்கையைத் தருக.
19. மணிப்பிரவாள நடையில் உருப்படிகளை இயற்றிய தமிழிசைப் பெரியாரின் பெயர் என்ன?
20. ஹிந்துஸ்தான் இசையை குறியீடு மூலம் எழுத, பாட வழிவகுத்தவர் யார்?

## பகுதி - 11

01. அ) பின்வரும் ஸ்வரஸ்கேதங்களை எடுத்துக்கொள்ளும் இராகங்களையும், எண்களையும் தருக.
   1) ரிகிமதிநி 2) ரிகிமிதநி 3) ரிகுமிதது 4) ரகுமிதிநி 5) நகுமதரு

   ஆ) பின்வரும் இராகங்களுக்கு உதாரணத்தையும், ஆரோகண அவரோகணத்தையும் எழுதுக.
   1) நிஷாந்திய இராகம். 2) ஸாடவ ஸம்பூர்ண இராகம்.
   3) ஏகாண்யஸ்வர பாஸாங்கராகம். 4) உபய வக்ர இராகம்.
   5) தைவதாந்திய இராகம்.

02. பின்வரும் இராகங்களுள் எவையேனும் இரண்டிற்கு இலட்சணத்தையும் ஸஞ்சாரங்களையும் எழுதுக.
   1) சுத்த சாவேரி. 2) ஹமீர் கல்யாணி. 3) ஸ்ரீரஞ்சனி. 4) வஸந்தா.

03. அ) சங்கீத லிபி என்பதன் பொருள் என்ன?
   ஆ) மேலைத்தேய சங்கீதத்தின் கால அளவைக் குறிக்கும் நடேசரின் வடிவங்களைத் தருக.
   இ) 175 தாளங்களின் கதிபேதங்களைத் தருக.
   ஈ) 12 ஸ்வரஸ்தானங்களுக்குரிய மேலைத்தேய ஸ்வரக் குறியீடுகளையும் கர்நாடக இசைப் பெயர்களையும் எழுதுக.

## பகுதி - 111

04. பின்வரும் உருப்படிகளின் இலட்சணத்தைத் தருக.
   1) தில்லானா. 2) இலட்சண கீதம்.

05. அ) தசவித கமகங்களை நிரைப்படுத்துக.
   ஆ) அவற்றில் ஐந்தினை விளக்குக.

06. நீர்கற்ற தசவித கமகங்கள் அடங்கிய அடதாள வர்ணத்தின் இராகதாளத்தைக் குறிப்பிட்டு பல்லவி, அனுபல்லவி ஸ்வர சாகித்திய தாள அங்க அடையாளங்களுடன் எழுதுக.

07. இராகத்தின் தசஹ இலட்சணங்களையும் கமகங்களையும் எழுதி அவற்றில் மூன்றினை விளக்குக.

## கர்நாடக சங்கீதம் - 02, பகுதி - 1

பகுதி 'அ' இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி 'ஆ' இல் நான்கு வினாக்களுக்கும் விடைதருக.

பகுதி 'அ'

01. ஒரு இராகத்தில் பலதடவை இடம்பெறும் ஸ்வரம் எவ்வாறு அழைக்கப்படும்?
02. மத்தியஸ்தாயி பஞ்சமத்திற்கு மேல் சஞ்சாரமில்லாத இராகம் எது?
03. இராகத்திற்குரிய ஸ்வர சங்கேதாட்சரங்களை சாகித்தியத்தில் கொண்டுள்ள பகுதி யாது?
04. கமாஸ் இராகத்தின் தாய் இராகம் எது?
05. ஆறு தந்திகளை உடைய ஹிந்துஸ்தானிய வாத்தியம் எது?
06. கீத கோவிந்தம் என்ற நூலை எழுதியவர் யார்?
07. ஐந்து விரல்களையும் பயன்படுத்தி இசைக்கருவிகளை வாசிக்கும் முறை யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது?
08. ஜதிகள், சொற்கட்டுகளால் ஆக்கப்பட்ட உருப்படி யாது?
09. கீரவாணியின் நேர் பிரதிமத்திம இராகத்தின் மேள எண் யாது?
10. "வலச்சி" என்ற நவராகமாலிகா வர்ணத்தை இயற்றியவர் யார்?
11. தரு எவ்வகை சங்கீதத்தைச் சேர்ந்தது?
12. திருவாசகம் பாடப்படும் இராகம் எது?
13. [illegible] வாத்தியத்தை சீரமைத்து அறிமுகப்படுத்தியவர் யார்?
14. [illegible] வாத்தியத்தில் எத்தனை தந்திகள் உண்டு?
15. தியாகராஜ சுவாமிகள் எந்த ராகங்களில் பஞ்சரத்னக் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார்?

(இந்த வினாத்தாளின் தொடர்ச்சி இனியும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயனின் விசேட ஆசிரியர் குழாமின் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் இலகுவழிப் பயிற்சி

1.தரப்பட்ட பந்தியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

சூரிய ஒளியை நாம் விரும்புவதில்லை. நான் மரங்களின் இலைகளை உண்பேன். துருத்து இலைகளையும் தண்டுகளையும் கூட உண்பேன். மரப்பட்டைகளையும் உண்பேன். எனது தலையின் இரு பக்கங்களிலும் இரு உணர்கொம்புகள் உள்ளன. இவை இரண்டினதும் ஓரமாக இரு சிறிய கண்கள் எனக்குண்டு. எனது உடலில் எலும்புகள் இல்லை. நான் ஊர்ந்து செல்லும்போது நான் போகும் வழியே மினுமினுப்பான ஒரு பதார்த்தைவிட்டுச்செல்வேன்.

1. மேலே தரப்பட்டுள்ள விபரணம் எதனைப் பற்றியதாகும்?

.........................................

✢அடைப்புக்குள் காணப்படும் சொற்களில் இருந்து பொருத்தமான இரண்டைத் தேர்ந்து அவற்றின் கீழ்க்கோடிடுக.

2. பெயர்ச்சொற்கள் இரண்டு
(உண்டு, இலைகள், இல்லை, தண்டுகள்)
3. வினைச்சொற்கள் இரண்டு
(தண்டுகள், உண்பேன், போவேன், சூரியஒளி)
4. பெயர் அடைமொழிகள் இரண்டு
(நீண்ட, மட்டும், சிறிய, பதார்த்தம்)

✢பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றிற்கும் சமமான ஆங்கிலச்சொல்லை எழுதுக.

5. தலை :.........................................
6. கண்கள் :.........................................
7. உண்ணுதல் :.........................................
8. இரண்டு :.........................................
9. இல்லை :.........................................


பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான எதிர்ச்சொல் தருக

10. பகல் :.........................................
11. நீண்ட :.........................................
12. விருப்பம் :.........................................
13. போ :.........................................

பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான ஒத்தசொல் எழுதுக

14. கண்கள் :.........................................
15. உடல் :.........................................
16. மரங்கள் :.........................................
17. ஒளி :.........................................
18. உண்பேன் என்னும்சொல் குறிக்கும் காலம் யாது?
.........................................
19. பந்தியிலுள்ள தன்மைப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக .........................................
20. எனது என்பதன் பன்மைச்சொல்லை எழுதுக .........................................
21. பக்கங்களிலும் என்பதன் ஒருமைச்சொல்லை எழுதுக .........................................
22. பந்தியிலுள்ள சினைப்பெயர்கள் இரண்டினை எழுதுக .........................................

2) ஒளியுடன் விளையாட்டுச் செயற்பாட்டின்போது மாணவர்கள் செய்த அமைப்பை கீழே உள்ள படம் காட்டுகிறது.



1. நீருக்குள் சாய்வாக வைக்கப்பட்ட பொருள் யாது?.........................................
2. இங்கே சூரிய ஒளியைச் சுவரில் படவிடும்போது எதை அவதானிப்பர்?
.........................................................................................
3.சூரிய ஒளியினுள் உள்ள சில நிறங்கள் தரப்படுகின்றன. ஏனைய நிறங்களை எழுதுக

ஊதா மஞ்சள் சிகப்பு
செம்மஞ்சள் ...................... ......................


3) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( ✕ ) எனவும் அடை யாளத்தை எழுதுக

1. தந்தி, பக்ஸ், ஈமெயில் போன்றவற்றின் மூலம் தகவல்களைப் பரிமாறலாம் ( )
2. தினசரிப் பத்திரிகை ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டுமே வெளிவருகின்றன ( )
3. பஸ் தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் போன்றவை பொது இடங்களல்ல. ( )
4. ஒரு நாட்டில் இருந்து இன்னொரு நாட்டுக்கு கப்பல் மூலம் அல்லது விமானம் மூலம் பயணம் செய்யலாம் ( )
5. வெண்டிக்காயின் நுனிப்பகுதியை நகத்தால் மடித்து உடைக்கக்கூடியதாக இருக்கும்போது கமக்காரர்கள் அறுவடை செய்கிறார்கள் ( )
6. விமானம் மூலம் வேகமாக பயணம் செய்யமுடியாது. ( )
7. இரத்தினக்கற்கள் இரத்தினபுரியில் விளைகின்றன ( )
8. நகர்ப்புறங்களில் குழாய்நீருக்கு வரி செலுத்தப்படுவதில்லை ( )
9. வித்துக்களைப் பயன்படுத்தி அல்பனா, மொஸாயிக் போன்ற சித்திரங்களை ஆக்க லாம் ( )
10. புனித வெள்ளரசு மரம் பொலநறுவையில் உள்ளது. ( )

4) பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

1. யன்னலொன்றுக்கு பூசுவதற்கு 1 லீற்றர் 125 மில்லி லீற்றர் வர்ணக் கலவை தேவையாகும். அவ்வாறான 5 யன்னல்களுக்குப் பூசுவதற்கு எவ்வளவு வர்ணக் கலவை தேவை?
.........................................
2.தேக்கரண்டி ஒன்றின் கொள்ளும் திரவத்தின் கனவளவு 5 அட ஆகும். நாளொன்றுக்கு இரு தடவைகள் 2 தேக்கரண்டி வீதம் மருந்து எடுத்தால் நாளொன்றில் எடுக்கப்படும் மருந்தின் அளவு யாது?
.........................................
3. 7 லீற்றர் தேங்காயெண்ணெய் 10 சமமான போத்தல்களில் நிரப்பப்பட்டது. ஒரு போத்தலில் நிரப்பப்பட்ட தேங்காயெண்ணெயின் அளவை மில்லிலீற்றரில் காணுங்கள்?
.........................................
4. அம்மா 22 மீற்றர் துணியை ஒரே அளவான 10 கதவுத் திரைச்சீலைகளாக வெட்டி எடுத்தார். திரைச் சீலை ஒன்றின் நீளத்தை காணுங்கள்?
.........................................
5. 380 Kg அரிசியைக்கொண்டு 10 Kg பொதிகளாக எத்தனை பொதிகள் தயாரிக்க முடியும்?
.........................................
6. பெட்டியொன்றில் 32 சவர்க்காரக் கட்டிகள் வீதம் 10பெட்டிகளில் உள்ள சவர்க்காரக் கட்டிகளின் எண்ணிக்கை யாது?
.........................................
7. மண்டபம் ஒன்றின் திரையொன்றில் 10 கதிரைகள் வீதம் 87 நிரைகளில் கதிரைகள் உள்ளன. மண்டபத்தில் உள்ள கதிரைகளின் எண்ணிக்கை யாது?
.........................................
8. 75 cm நீளமுள்ள கீலம் எத்தனை mm? mm
.........................................
9. குமரன் ஒன்று 45 ரூபா விலையுள்ள புத்தகங்கள் 5 ஐ வாங்கிய பின்பு 500 ரூபாவை கடைக்காரரிடம் கொடுத்தால் மிகுதிப்பணம் எவ்வளவு?
.........................................
10. போத்தலொன்றில் உள்ள மருந்து மேசைக்கரண்டியால் 10 தடவை அளந்து எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட மருந்தின் அளவை மில்லி லீற்றரில் எழுதுக.
.........................................

5) பின்வரும் கரை அலங்கார வடிவங்களின் பெயர்களை எழுதுக

1. 
2. 
3 
4 


6) கீழ்வரும் தாவரப்படங்களின் பெயரை எழுதுக

1.  ........................
2.  ........................
3.  ........................
4.  ........................

7) இலங்கை நாட்டின் தேசியத்துடன் சம்பந்தப்பட்ட பெரியார்களின் பெயர் களை எழுதுக

1.  ........................
2.  ........................
3.  ........................
4.  ........................


8) பின்வரும் விளையாட்டுப் பொருள்கள் எந்தெந்த விளையாட்டுக்குரியவை என எழுதுக

1.  ........................
2.  ........................
3.  ........................
4.  ........................

9) பின்வரும சிங்களச் சொற்கள் குறிக்கும் தமிழ்ச்சொல்லை எழுதுக
1. குரு(த்)துமா........... 2. குரு(த்)துமி.........



10) பின்வரும் தமிழ்ச்சொற்கள் குறிக்கும் சிங்களச் சொல்லை தமிழில் எழுதுக
1. கரும்பலகை........ 2. சோறு.......

11) பின்வரும் படத்தை அவதானித்து வாக்கியங்கள் எழுதுக



1. .........................................
2. .........................................
3. .........................................
4. .........................................

12)சரியான விடையைத் தெரிந்து எழுதுக
சங்கிலித் தையல், மீன்முள்ளுத் தையல், கம்பளித்தையல், சிறுநூலோடி

1.  இத்தையல் முறை யாது?
2.  இத்தையல் முறை யாது?

13) எமது நாட்டின் கரையோரப் பிரதேசத்தில் ஏற்பட்டகடற்பெருக்கினால் என்னும் சம்பவத்தினைத் தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலைகள் சரியாக அமைதல் வேண்டும்.
1. .........................................
2. .........................................
3. .........................................
4. .........................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களின் பரீட்சைத் தேர்ச்சிகளுக்கு ஆசிரியர்களின் திறமையான வழிகாட்டல் அவசியம்

* ஏன் இன்றைய பாடசாலை மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைச் சேவை அவசிய தேவையாகவுள்ளது?
* இதற்கான ஆசிரியர்கள் வகி பங்குகள் எவை?
* மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சை -கல்வி - தொழில் சார்ந்த சவால்கள் எவையாகவுள்ளன?
* அவற்றைத் தீர்க்க எவ்வாறான ஆலோசனை வழிகாட்டல் சேவையை வழங்கலாம்?

இவை இன்று பொதுவாக எழுந்துள்ள கேள்விகள்

தனிநபர்கள் நிகழ்கால வாழ்வியலில் ஒத்துப் போவதற்கும், எதிர்கால வாழ்விற்கான திட்டங்களையும், எண்ணங்களையும் வகுப்பதற்கும், திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கும், பிரச்சினைகளுக்கும், சவால்களுக்கும் முகம் கொடுத்து வெற்றி காணும் தேர்ச்சிகளைப் பெற வழிகாட்டல் ஆலோசனைச் சேவை உதவுகின்றது. இது தனி மனிதர்களுடைய கல்வி அனுபவங்கள் மூலமாகத் தம் ஆற்றல்களைத் தெரிந்து



பா.தனபாலன்
உப பீடாதிபதி
(கல்வி)
யாழ்.தேசிய
கல்வியியற் கல்லூரி

கொள்வதற்கும், சமூகத் தேவைகளை உணர்ந்து கொண்டு அதுக்கேற்ப தம்மை இயைபாக்கிக் கொள்வதற்கும். அவற்றில் மகிழ்ச்சி அடைவதற்கும், மேலும் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளவும் வழிகாட்டுகின்றது. பாடசாலை ஆசிரியர்கள் தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கு இவ்வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் சேவையைப் பிரயோகிக்க வேண்டிய தேர்ச்சிகளைக் கட்டாயமாகப் பெற வேண்டும்.

இதனூடாக

* மாணவ-மாணவியரின் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த வழிகாட்டலை மேற்கொள்ளல்.
* தகுதியான பாடத் தெரிவுகளுக்கும்- கற்கை நெறிகளுக்கும் தொழில் தெரிவுகளுக்கும் வழிகாட்டல்.
* தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற தொழில்களைப் பரிந்துரை செய்தல்.
* மாணவர்களின் பிரச்சினைகளையும், தாழ்வுமனப்பான்மைகளையும் போக்குதல்.
* பிறழ்வான, தீயநடத்தைகளில் ஈடுபடாது தடுத்தல்.
* ஒரு பருவத்திலிருந்து மற்றொரு பருவத்திற்கு வரும்பொழுது ஏற்படக்கூடிய பழக்க வழக்கப் பண்பாட்டு மாறுதல்களை அடையாளம் கண்டு இயைபாக்கமடைய வைத்தல்.
* பலவீனமானவர்களுக்கு அவர்களுடைய பலவீனம் எது என்பதை அறிந்து, அதற்கு ஏற்ற ஆலோசனையை வழங்கல்.

இவ்வகையில் ஆசிரியர்கள் உண்மையானவர்களாகவும், அன்பானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும், சகிப்புத்தன்மையோடு எல்லா மாணவர்களிடமும் ஒரே மாதிரியாக நடந்து கொள்வதன் மூலமாக, மாணவர்களின் தனியான வேறுபாடுகளை உணர்ந்து செயற்படுபவராக இருக்கும்போது அவர் வழிகாட்டல் ஆலோசனை வழங்கல் தேர்ச்சியைப் பெற்றவராகிறார். வாழ்க்கையில் உயர்ந்த அனைவருமே தங்களின் வெற்றியின் இரகசியம் தங் களை வழிநடத்திய ஆசிரியர்கள் தான் எனத் தெரிவிக்கின்றனர். மேலும் இன்றைய பாடசாலை மாணவர்கள் பொதுப் பரீட்சை களுக்குத் தயாராகும் போது பல இடர்களை அனுபவிக்கிறார்கள், குழப்பமடைகின்றார்கள். இவற்றைப் போக்க ஆசிரியர்கள்; மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்க வேண்டியுள்ளது.

### பொதுப்பரீட்சைக்கு ஆயத்தமாகும் மாணவர்களுக்கு

நீங்கள் பதட்டமடையக் கூடாது; படிக்கும்போது நல்ல காற்றோட்டம் நிறைந்த இடத்தில் அல்லது அறையிற் படிக்க வேண்டும். ஏனைய குழப்பங்கள், பிரச்சினைகள் எல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டுக் கல்வியில் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டும்.

1. ஒவ்வொரு பாடத்தையும்முறையாக வரிசைப் படுத்திக் கொண்டு, அட்டவணை அல்லது நேரசூசி தயார்செய்து திட்டமிட்டுப் படிக்க வேண்டும். சுயமாகக் கற்றலே பரீட்சைகளில் வெற்றியைக் கொடுத்துள்ளது.
2. படித்த பாடங்களை நடந்துகொண்டே அசை போடலாம். (நீண்ட நேரம் படிப்பதால் சோர்வு ஏற்படலாம்)
3. முதல்நாள் படித்த பாடத்தை மறுநாள் எழுந்தவுடன் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதன்மூலம் மறதி குறையும்.
4. ஒருபாடத்தைப் புரிந்தோ- புரியாமலோ ஓரிருமுறை வாசிக்க வேண்டும். பின் தேவையான புரியாத பகுதிகளைக் குறிப்பெடுக்கலாம். அவற்றை ஆசிரியர் அல்லது நண்பர்களிடம் கேட்டுப் புரிந்து கொள்ளலாம்.
5. விடிய விடியக் கண் விழித்துப் படிக்கக் கூடாது. அவ்வாறு படிப்பதால் எவ்வித பயனும் கிடைப்பதில்லை என உளவியல் ஆய்வுகள் எடுத்து இயம்புகின்றன.
6. படிக்கும் காலத்தில் உணவில் கட்டுப்பாடும் சத்துள்ள உணவுகளும் உண்ண வேண்டும். தண்ணீர் அதிகமாகக் குடிக்க வேண்டும்.
7. மதிய உணவுக்குப் பிறகு சிறு ஓய்வு அல்லது உறக்கம் நல்லது.

## பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பதற்றமடைவதைத் தவிர்க்கவேண்டும்

பெற்றார்கள் படிக்கும் தம் பிள்ளைகளுக்கு அருகிற் சென்று அடிக்கடி தொல்லை கொடுக்கக் கூடாது. போசாக்குள்ள உணவுகளை வழங்கி அவர்கள் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டவேண்டும். பிள்ளைகள் படிக்கும்போது தொலைக்காட்சி, வானொலி என்பவற்றைப் பயன்படுத்தல், வேறு தடையான செயற்பாடுகளைச் செய்யக் கூடாது. தொடர்ந்து தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் ஊட்டிக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான ஆலோசனைகளை ஆசிரியர்கள்; பெற்றோர்களையும் மாணவர்களையும் அழைத்துக் கூறு தல் வேண்டும். பரீட்சைக் காலங்களில் மாணவர்கள் சோர்வாக இருப்பார்களேயானால் அவர்களுக்கு விற்றமின் 'B' மாத்திரைகளைப் பயன்படுத்த ஆலோசனை வழங்கலாம்.

### மாணவர்களின் உள ஆற்றலைப் பெருக்கும் ஆசிரியரின் வகி பங்குகள்

ஆசிரியர்கள் விழிப்புணர்வும், மாணவர் பால் உற்சாகமும், ஆசீகரமும், நட்பும், நம்பிக்கையும் உடையவராக இருத்தல்




வேண்டும். கல்வி, ஆளுமை,பொறுமை, நேர்மை, சமநோக்கு, கணிப்பு, கூட்டுறவு வகிபாக மனப்பாங்குகளினூடாக மாணவர்களை வழிப்படுத்தி அவர்களுடைய உள ஆற்றலைப் பெருக்க வேண்டும். இதற்கு ஏற்ப ஆசிரியர்கள் தம்மைப் பின்வரும் துறைகளினூடாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

* பிரயோக உளவியலறிவு
* சமூகக் கருத்தியல்கள் தொடர்பான கற்கைகள்
* கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகளைக் கிரகித்துப் பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்.
* கலை, பண்பாடு, இலக்கியங்கள் பற்றிய அறிவின் விரிவு

(தொடரும்)




சுன்னாகம் றோட்டரக் கழகத்தினால் அப்பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் பயிலும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு அண்மையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன..

கழக உறுப்பினர்களையும் உபகரணங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# விடாமுயற்சியும் தீவிரமான பயிற்சியுமே தேசிய ரீதியில் சாதனை படைக்க வைத்தன



விடா முயற்சியும் தீவிரமான பயிற்சியும் நான் தேசிய மட்டத் தமிழ்த் தினப்போட்டியில் முதலிடம்பெற்றுச் சாதனை படைக்க பெரிதும் உதவியாக அமைந்தன என்கிறார் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் பாஸ்கரன் வினோஜன்.

ஆறாம் ஆண்டில் கல்வி கற்கும் இவர் இவ்வாண்டு நடைபெற்ற தேசிய தமிழ் தினப் போட்டியில் ஆக்கத்திறன் பிரிவில் முதலிடம் பெற்றுச்சாதனை படைத்தார்.

தனது சாதனை தொடர்பாக அவர் உதயனுக்கு வழங்கிய செவ்வி வருமாறு:-

நான் எனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் கற்றேன். ஆண்டு ஒன்று முதல் எனது பெற்றோரின் இடைவிடாத ஊக்கத்தினால் கல்வியில் அதிக அக்கறை காட்டி வந்தேன்.

எனக்குப் பாடங்களில் சந்தேகம் ஏற்படுகின்ற வேளைகளில் எனது பயிற்சி ஆசிரியரிடம் அதனைக்கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

தேவையான பாடப் புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் என தாயார் என்னையும் புத்தகக் கடைகளுக்கு அழைத்துச் சென்று வாங்கித் தருவார்.

எனது ஆர்வம், முயற்சியின் காரணமாக கரவெட்டி வித்தியாலயத்திலும் ஆரம்பம் முதல் ஆண்டு 5 வரை மேற்படி பாடசாலையில் அனைத்துப் பாடங்களில் நான் தான் முன்னிலை வகித்து வந்தேன். அதற்கு முக்கிய காரணம் எனது பயிற்சி ஆசிரியையும் பாடசாலை அதிபர் இ.இராகவனும் தான்.

தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டிக்கான முதல் படிகளில் நான் கோட்ட மட்டத்தில் போட்டியிட்ட ஏனைய பாடசாலை மாணவர்கள் ஐவருள் நான் இரண்டாம் இடத்தைப் பெற்றேன். எனது விடா முயற்சியும் பயிற்சியின் காரணமாக வலய மட்டத்தில் 15 மாணவர்களுள் நான் முதலாம் இடத்தை அடைந்தேன். மாவட்ட மட்டத்தில் 9 மாணவர்களுள் நான் முதல் நிலையை அடைந்தேன். மாகாண மட்டத்தில் 25 மாணவர்களுள் முதலாம் இடத்தையும் தொடர்ந்து தேசிய மட்டத்தில் 07 மாணவர்களுள் முதலாம் இடத்தையும் பெற்று ஆக்கத்திறன் பிரிவில் தேசிய மட்ட சாதனை படைத்துள்ளேன்.

### பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் வினோஜன் செவ்வி

நான் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டிக்குச்செல்ல முடியாத நிலை ஒன்று ஏற்படவிருந்தது. உரிய நேரத்தில் எனக்கு போக்குவரத்திற்கான அனுமதி கிடைக்கப்பெறவில்லை. அது கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இதனால் எம் மத்தியில் ஒரு ஏக்கம். ஆனால் எனது அதிபரின் உடனடி செயற்பாட்டினால் அந்த அனுமதியை உடன் பெற முடிந்தது. இதன் காரணமாக நான் எனது தாயாருடன் கப்பல் மூலம் கொழும்புக்குச் சென்றேன். அப்போது எனது தாயார் என்னைப் பார்த்து, உன்னால் போட்டியில் வெற்றி பெற முடியுமா? என்று கேட்டார். முயற்சி செய்கிறேன் நிச்சயம் என்னால் முடியும் என்று நான் சொன்னேன். நான் போட்டிக்கு வந்த ஏனைய மாணவர்களுடனும் கதைத்து எனக்குத் தெரியாத விடயங்களைத் தெரிந்து கொண்டேன். இதன் காரணமாக போட்டியில் நான் சுலபமாக சாதனை படைக்க முடிந்தது. இதில் இருந்து நான் கற்றுக் கொண்ட பாடம் முயன்றால் எதுவும் முடியும் என்பதே. இதன்ன என்று சக மாணவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகின்றேன் என்றார்.

-[illegible]-



சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி தமிழ் மன்றம் அண்மையில் நடத்திய 'தூறல்' கவிதை தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவில் நூல் மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சி.குமரன் நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.

கல்லூரி அதிபர் வ.சிறிகாந்தன் மற்றும் தமிழ் மன்ற பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் இங்கு காணலாம். *(படம்: வலி.தென்மேற்கு செய்தியாளர்.)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீது செய்தோரும் இறைவனிடம் அடைக்கலம் அடையலாம்

படைப்புத் தொழிலை ஏற்று நடத்தும் பிரம்மாவின் புத்திரன் தக்கன். தந்தைசொல் மிக்க மந்திரமில்லை என்பதற்கமையத் தந்தையார் சொற்படி நடந்து ஞானமும் கல்வியும் பெற்றுச் சிவனை வணங்கிக் குறைவிலா இன்பங்கள் பெற்றான். பின்பு மதிமயங்கி ஆணவத்தாலும் விதியின் பயனாலும் சிவனை நிந்தித்து யாகம் ஒன்று செய்தான்.

நற்குணங்கள் பொருந்திய அமரர்களும் தக்கனின் சொற்கேட்டு நடக்க வேண்டியிருந்ததால் அவன்வழி சென்றனர். இதனால் சிவனது அம்சமாகிய வீரபத்திரப் பெருமானால் தேவர்கள் முதலியோர் தண்டிக்கப்பட்டனர்.

இதிலிருந்து நாம் அறிவது யாதெனில் தீயவர்களின் சொற்படி நடந்தால் நல்லவர்களும் அல்லற்பட வேண்டிவரும் என்பதே ஆகும்.

பின்பு அத்தேவர்கள் தாம் செய்த பாவங்களுக்காகச் சூரன் போன்ற அசுரர்களால் கொடிய துன்பமடைந்து, தம் பதவிகளைத் துறந்து துன்பப்பட்டனர். அவர்கள் காலம் செல்லத் தம் பிழைகளை உணர்ந்து முழுமுதற் கடவுளாகிய சிவனை அணுகி அருள் புரிந்து தம்மைக் காப்பாற்றுமாறு வேண்டி நிற்க, அவர் தனது நெற்றிக் கண் மூலம் அழகன் முருகனைத் தந்து அத்தேவர்களுடைய துன்பங்களைத் துடைத்து முன்னைய சுவர்க்கலோகப் பதவிகளைக் கொடுத்தருளினார்.

இதனால் நாம் அறிய வேண்டியது யாதெனில், தீமைகள் பிழைகள் புரிந்தவர்களும் மனம் திருந்தி நல்லுணர்வு கொண்டு இறைவனிடத்தே அடைக்கலமடைந்தால் அவலங்கள் தீரும் என்பதாகும்.

*(நன்றி: ஞானச்சுடர்)*

## வாசகர் திருமுகம்

### வெளிவாரி இறுதித் தேர்வு முடிவுகள் விரைவில் வெளிவருமா?

வருடம் தோறும் ஆயிரக்கணக்கான மாணவர்கள் உள்வாரியாகவும், வெளிவாரியாகவும் யாழ்.பல்கலைக் கழகத்தில் பட்டங்களை பெற்று வருகின்றனர். அதிலும் குறிப்பாக பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி இருந்தும் உள்வாரியாகப் பட்டப் படிப்புகளை தொடர வாய்ப்புக் கிடைக்காத பல மாணவர்களுக்கு வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள் பிரிவு அரிய வாய்ப்பாகவே இருந்து வருகின்றது.

வெளிவாரி பட்டப்படிப்புகள் ஊடாக வேலை வாய்ப்புக்களை பெறுவதற்காகவும், ஏற்கனவே தொழில்களில் உள்ளோர் தமது தகுதி நிலைகளை உயர்த்திக் கொள்வதற்குமாக கற்கையில் ஈடுபட்டு வருகின்றனர். வேலை வாய்ப்பை பெறுவதும், தொழிலுயர்வு பெறுவதும் வாழ்வாதார அடிப்படைப்பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட விடயங்கள் கால நீட்சி என்பது எமது சமூகத்தின் குறிப்பாக பொருளாதார மற்றும் வயது அடிப்படையில் பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

இத்தகைய பின்னணிகளை தகவல்களாகக் கொண்டு சென்ற வருடம் செப்ரெம்பர்மாதம் நடாத்தப்பட்ட வெளிவாரி இறுதித் தேர்வு பரீட்சை முடிவுகளை விரைவாக வெளியீடு செய்ய பல்கலைக் கழக துணைவேந்தர் அக்கறை கொண்டு செயற்படுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். தொழில் வாய்ப்பைப் பெறவும், தொழில் உயர்வை பெறவும் இது உதவியாக அமையும்.

*யாழ்ப்பாணம்.* வெளிவாரி இறுதித் தேர்வு மாணவர்கள்.

### மண்டைதீவு நீர் விநியோகம்

மண்டைதீவில் தாய், சேய் நிலையத்திற்கும் மருத்துவ சேவைக்கும் சென்றபோது கர்ப்பிணித் தாய்மார்கள் பெற்றோர், நோயாளிகள் ஆகியோருக்கு சுகாதாரக் கல்வி வழங்கியபோது யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் ரி.பேரானந்தராஜா, சிறுநீரக வருத்தம் வராமல் தடுப்பதற்குத் தினமும் இரண்டு லீற்றர் தண்ணீர் பருக வேண்டும் என்று கருத்துத் தெரிவித்திருந்தார். தீவகத்தில் வெப்பம் அதிகம் அதனால் நீர் அதிகம் குடிக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

அப்போது அங்கு இருந்தவர்கள் அதிர்ச்சிதரும் திடுக்கிடும் தகவல் ஒன்றைக் கூறினார்கள். அதாவது கடந்த மார்கழி மாதம் முதல் ''பவுசர்'' மூலம் தண்ணீர் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் நாம் நீருக்கு மிகவும் சிரமப்படுகிறோம். கடற்கரையில் உள்ள கிணற்றில், இங்கு இருப்பவர்களும், வந்திருப்பவர்களும் தண்ணீர் எடுக்கிறார்கள். தண்ணீர் ஊற ஊற எடுக்க வேண்டும் என்றனர்.

நீர் விநியோகம் தடைப்பட்ட காரணத்தை ஆராய்ந்தபோது நீர் விநியோகத்திற்கான நிதி வழங்கிய அரச சார்பற்ற நிறுவனம் கார்த்திகையுடன் அதனை நிறுத்தி விட்டார்கள். அதனால் பவுசர் மூலம் சாட்டியில் இருந்து நீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மனித வாழ்விற்கு உணவு, நீர், உறைவிடம் முக்கியமானது. சுகாதார வாழ்வுக்கு மிகவும் அவசியம் சுத்தமான நீர், யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் மண்டைதீவு மக்களின் அவல நிலையை உணர்ந்து நீர் வழங்க நிதி வழங்கி அவர்களுக்கு உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

*பிரதேச வைத்தியசாலை,*
*வேலணை.*

Dr.ஆ.திருநாவுக்கரசு,
*வைத்திய அதிகாரி.*

### இந்தத்தடை இப்போது இல்லையா! இடைநடுவில் ஏற்படுத்தப்பட்டதா?

இன்று பல பாடசாலைகளில் அதிபர்கள் ஓய்வுபெறும் சந்தர்ப்பங்களில் வலய கல்விப் பணிப்பாளர்களினால் பத்திரிகை விளம்பரம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் தரமானவர்கள் நியமிக்கப்பட்டு வருகிறார்கள்.

இதன் அடிப்படையில் இவ்வருடம் பெப்ரவரி மாதத்தில் யாழ்.கல்வி வலயத்திலுள்ள 3 பாடசாலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டு தெரிவுகள் இடம்பெற்று முடிந்த வேளையில் 2 பாடசாலைகளின் அதிபர் வெற்றிடங்கள் உடனே ஏற்பட்டதால் அவை அத்தெரிவுகளின் அடிப்படையில் நிரப்பப்பட்டன. 3வது பாடசாலைக்கு தெரிவு செய்யப்பட்டவர் இலங்கை ஆசிரியர் சேவை தரம் I ஐ சேர்ந்த ஒரு தேசிய பாடசாலையின் ஆசிரியர் ஆவார். இவரது தெரிவு வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட வேளை அங்கிருந்து அப்பெயரை நீக்கி இரண்டாவது இடத்தில் உள்ளவருக்கு அப்பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான காரணம் தேசிய பாடசாலை ஆசிரியர் ஒருவருக்கு மாகாண பாடசாலைக்கு பதவி உயர்வு வழங்க முடியாது என இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ்.வலய கல்விப் பணிப்பாளரும் கூறுகின்றனர். இதுவரை காலமும் இவ்வாறான பதவி உயர்வுகள் இந்தத் தடைகள் எதுவுமின்றி வழங்கப்பட்டே வந்துள்ளன. இருப்பினும் இந்த பதவி உயர்வுக்கான தெரிவு ஒரு வலய கல்விப் பணிப்பாளராலும் தெரிவுக்கான திணைக்கள குழுவினாலும் பெப்ருவரி மாதத்திலேயே நடந்து முடிந்த ஒன்றாக இருந்தும் கூட அதனை இரத்து செய்து புதிய முடிவு என்று ஒன்றை கூறி நடைமுறைப்படுத்துவது தனிப்பட்ட ஒருவரை பாதிக்கும் செயலாகவே அமைந்துள்ளது.

10.06.2008ஆம் திகதியிலும் கூட தற்போதைய யாழ்.வலய கல்விப் பணிப்பாளரினால் 3 பாடசாலை அதிபர் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அதில் தேசிய பாடசாலை ஆசிரியர்கள் விண்ணப்பிக்க முடியாது என்ற எந்த ஒரு நிபந்தனையும் இல்லை. அப்படியாயின் இந்த தடை தற்போது இல்லையா? இடைநடுவில் ஏற்படுத்தப்பட்டதா? என்பது புரியவில்லை.

உயர் பதவிகளில் உள்ளவர்கள் மற்றவர்களையும் மனிதர்களாக நினைத்து தங்கள் அதிகாரங்களை மற்றவர்களின் மனங்கள் பாதிக்காத வகையில் பயன்படுத்தினால் அனைவரும் மகிழ்வுடன் சேவை செய்து ஒரு நல்ல சமூகத்தை உருவாக்க வழிவகுக்கும் என தெரிவித்துக் கொள்கின்றேன்.

*கோப்பாய்.* பா[illegible]

## சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜூன்27

சுழிபுரம் - பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

பதினொராவது நாள் தேர்த்திரு விழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

சங்காபிஷேகம் தொடர்ந்து வரும் வெள்ளிக்கிழமை காலை முதல் நடைபெறும். (202-28)

* * *

சுழிபுரம், ஜூன்27

வழக்கம்பரை மகா முத்துமாரி அம்பாள் ஆலய மகா சங்காபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

நண்பகல் அம்பாள் வீதியுலா வருதல் நடைபெறும். (202-28)

* * *

சங்கானை, ஜூன்27

சங்கானை அரசடி வைரவ ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேர் பவனியும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (202-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்27

மீசாலை வடக்கு ஸ்ரீ இராமாவில் கந்தசாமி ஆலய பெருந்திருவிழாவில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (202)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்27

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன் ஆலய மணவாளக் கோல அலங்கார உற்சவம் எதிர்வரும் 4ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.


அடுத்த மாதம் 28ஆம் திகதி காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தொடர்ந்து ரதபவனியும் இடம்பெறும். (202)



திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழாவின் போது எடுத்த படங்கள்.

விநாயகர் தேருக்கு எழுந்தருளி வருவதையும் தேருலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:லக்ஷ்மன்)*



வடமராட்சி கப்புது நுணுப்பாவளை முருகப்பெருமான் பூங்காவனத் திருவிழாவிலே முத்துச் சப்பறத்தில் வீதிவலம் வரும் காட்சி. (218)




மல்லாகம் புனித சதாசகாய அன்னையின் புதிய கோயில் அபிஷேக விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது.

புதிய ஆலயத்தில் யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம் : நேசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இத்தேசத்தின் பண்பாட்டுக் கோலமாக சித்திரவதை எனும் மனிதக் கொடூரம்

சர்வதேச ரீதியில் இரண்டு முக்கிய தினங்கள் நேற்று அனுஷ்டிக்கப்பட்டன. ஒன்று - போதைப் பொருள் எதிர்ப்பு தினம். மற்றது - சித்திரவதைகளுக்கு எதிரான தினம்.

இலங்கையைப் பொறுத்தவரை இவை இரண்டுமே மிக முக்கியமானவை.

போதை வஸ்துகளினால் மட்டுமல்ல, பௌத்த - சிங்கள மேலாதிக்கம் என்ற போதையிலும் நாடு மூழ்கிக் கிடக்கின்றது.

அதன் விளைவாக சிறுபான்மை இனத்துக்கு எதிரான சித்திரவதைகள் இங்கு தாராளமாக அரங்கேறுகின்றன.

இதனால் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட இரண்டு தினங்களுமே இங்கே முக்கியமானவையாகக் கருதப்பட வேண்டியவை.

இலங்கையில் மிக மோசமான சித்திரவதை நடைமுறைகள் தொடர்கின்றன. அவற்றைத் தடுப்பதற்கான அரசியல் உறுதிப்பாடு - திடசங்கற்பம் - ஆட்சி அதிகாரத்திடம் கிடையாது என்று ஆசிய மனித உரிமைகள் ஸ்தாபனம் அப்பட்டமாகத் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் சிறிய குற்றங்கள் என்றாலும் சரி, அல்லது கடுமையான குற்றங்கள் என்றாலும் சரி, அவற்றில் அல்லது அவசரகாலச் சட்ட விதிகள், பயங்கரவாதத் தடுப்புச் சட்ட விதிகள் போன்றவற்றில் எதிலும் சம்பந்தப்பட்டு சிக்குபவர்கள் தொடர்பில் முதலில் சித்திரவதை, பின்னர் விசாரணை என்ற கீழ்த்தரமான அணுகுமுறையே பின்பற்றப்படுகின்றது என்பதைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியிருக்கின்றது ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு.

அந்த அமைப்பு இலங்கை விடயத்தில் சுட்டிக்காட்டியுள்ள மற்றொரு முக்கியமான அம்சமும் இங்கு ஊன்றிக் கவனிக்கத்தக்கது.

இலங்கை பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் - இந்த அறுபது ஆண்டு காலமும் - ஆட்சியில் இருந்த எந்த அரசும், அரசுக் கட்டமைப்புக்கு உட்பட்ட காவல் நிலையங்களிலும் புலனாய்வு மையங்களிலும் தாராளமாக சித்திரவதைகள் இடம்பெறுவதைத் தடுக்க முயலவேயில்லை என்ற யதார்த்தம்தான் - உண்மைதான் - அது.

இதற்கு மாறாக, சகல அரசுகளும் சித்திரவதைக் கொடூரத்தை ஊக்குவித்து, அதன் ஊடாகத் தமக்குச் சார்பான நன்மைகளைப் பெறுவதிலேயே கரிசனை காட்டி வந்துள்ளன.

இதன் காரணமாக மனித குலத்தின் நாகரிகப் பண்புகளுக்கும் மனித நேய விழுமியங்களுக்கும் மாறான இத்தகைய கொடூரச் சித்திரவதை என்ற அராஜகத்துக்கு முடிவு கட்டுவதற்குப் பதிலாக, சட்ட அமுலாக்கல் அமைப்புகளில் இவற்றைத் தாராளமயப்படுத்தி, ஊக்குவித்து, தமது அரசியல் நோக்கங்களை எட்டுவதற்கு அதனை ஒருவழியாக - மார்க்கமாக - பயன்படுத்தும் கேவலமே தொடர்கின்றது.

இதனால் இலங்கைத் தேசத்தில் சித்திரவதைக்கு உள்ளாகாமல் இருப்பதற்கு ஒருவருக்கு உள்ள அடிப்படை மனித உரிமை ஆளும் தரப்பின் ஆசீர்வாதத்துடன் மறுக்கப்படுவதோடு, அந்த இழிசெயலை சம்பந்தப்பட்டோர் கொடூரமாகவும் கோரமாகவும் தொடர ஊக்குவிக்கவும் பட்டுள்ளனர் என்றும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

தன்னை சட்டபூர்வமான - இறைமையுள்ள - அரசு என்று கூறிக்கொள்ளும் இலங்கை அரசும், அதன் தலைமைகளும் இவ்வாறு தாராள சித்திரவதைக்கு சட்டபூர்வ அந்தஸ்தும், அனுமதியும் அளித்துக்கொண்டு -

மறுபுறத்தில் தமது உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தி விடுதலைப் போராட்டம் நடத்தும் தமிழர்களைப் பார்த்து 'பயங்கரவாதிகள்' என்றும், அவர்கள் செய்வது 'பயங்கரவாதம்' என்றும் விமர்சிப்பது மிகவும் வேடிக்கையாகும். 'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்றதாம்!' - என்றமாதிரியுள்ளது பயங்கரவாதம் என்ற இந்தப் பேச்சு.

தலைநகர் கொழும்பிலும், தமிழர் தாயகத்திலும் இப்போதெல்லாம் தினசரி வழக்கமாகிவிட்ட ஆள்கடத்தல்கள், காணாமற் போதல்கள், படுகொலைகள், அச்சுறுத்திக் கப்பம் அறவிடல் போன்ற சகல கொடூரங்களிலும் பணயமாகச் சிக்குபவர்கள் தாராளமாகச் சித்திரவதை செய்யப்படுவது சாதாரண விவகாரம்.

இத்தகைய கொடூரங்களில் சிக்கி, தெய்வாதீனமாக உயிர் தப்பிப் பிழைத்தவர்களின் கதையை - பட்டறிவை - அனுபவத்தை - கேட்டால் மயிர் கூச்செறியும். அத்தகைய சித்திரவதைக் கொடூரங்களை அவர்கள் அனுபவித்திருப்பார்கள்.

ஆனால் இத்தகைய கொடூரங்கள் பற்றிய முறைப்பாடுகள் செய்யப்பட்டாலும் நடவடிக்கை ஏதும் இங்கு எடுக்கப்படுவதேயில்லை.

இலங்கையில் சித்திரவதையை மேற்கொள்வது என்பது ஆளும் வர்க்கத்தினதும், ஆட்சிப் பீடத்தினதும், அதிகாரத் தரப்புகளினதும் மறுக்கப்படவே முடியாத அதிகார உரிமை என்பது போலவும் -

அடிபட்டு, சித்திரவதைக்கு உள்ளாகி, நொந்து, நூலாகி, அடங்கிப் போவது என்பது இங்கு பாமர மக்களின் மீது நிரந்தரப் பட்டயமாக அறையப்பட்டுத் திணிக்கப்பட்டிருக்கும் மாற்றவே முடியாத பொறுப்புரிமை என்பது போலவும் - ஆகிவிட்டது.

ஆட்சி அதிகாரத்தை நிலைநிறுத்தி ஸ்திரப்படுத்துவதற்குத் தன்னுடைய காவல் மற்றும் விசாரணை அமைப்புகள் சித்திரவதை செய்வதை அனுமதித்தேயாக வேண்டும் என்ற திடசங்கற்பத்தில் ஆட்சித் தலைமைகள் இருந்தால் - இருப்பதால் - சித்திரவதை இந்தத் தேசத்தின் பண்பாட்டுக் கோலமாகிவிட்டது எனலாம்.

## எரிபொருள்கள் தொடர்ந்து விலை அதிகரித்து வருவது மாநகர சபை வேலைத்திட்டங்களைப் பாதிக்கின்றது!

### ஆணையாளர் மு.செ.சரவணபவ உதயனுக்குத் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்27

மாநகர சபையின் அபிவிருத்தி வேலைகளுக்கு வாகனங்கள் பயன்படுத்துவது அவசியமாகும். இந்நிலையில் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள்களின் விலை அபிவிருத்திப் பணிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

யாழ்.மாநகர சபை தற்போதைய சூழ்நிலையில் சிறிய வேலைத் திட்டங்களையே மேற்கொண்டு வருகிறது. சேதமடைந்த, போக்குவரத்துக்கு அவசியமான வீதிகளைப் புனரமைப்பது, நகரத்தின் கழிவுகளை அகற்றுதல், வடிகால்களை உரிய முறையில் பராமரிப்பது, சுகாதார சுத்திகரிப்பு போன்றவற்றிலேயே தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த வேலைகளை மேற்கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் வாகனங்களைப் பயன்படுத்த வேண்டி இருப்பது தவிர்க்கமுடியாததாகும். எரிபொருள் விலையேற்றம் மாநகரசபை வேலைத்திட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய சூழலில் வாகனங்களின் பாவனையை மட்டுப்படுத்துவது இயலாததாக இருக்கிறது. விலை உயர்வும் அதன் பாதிப்பும் எதிர்காலத்தில் கூர்மையடைவது மேலும் பாதகமான போக்கையே காட்டும்.

நல்லூர் திருவிழாக் காலத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆலய சுற்றாடலில் மணல் பரவுதல், நீர் தெளித்தல், பந்தல்களைப் பராமரித்தல் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் நடைமுறைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இத்தகைய அத்தியாவசியமான காரணங்களால் வாகனங்களின் பாவனையையும் எரிபொருள் பாவனையையும் கட்டுப்படுத்த இயலாதிருப்பதாக - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-302)

## அராலியில் ஊரடங்கு வேளையில் ஆயுத முனையில் நகைகள் கொள்ளை

அராலி,ஜூன்27

வீட்டை சோதனையிடப் போவதாகக் கூறி ஆயுதங்களுடன் வீட்டில் நுழைந்த திருடர்கள் ஆயுதமுனையில் வீட்டாரை நிறுத்தி பணம் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

அராலி வடக்கு, செட்டியார்மடம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த துணிகரமான கொள்ளை இடம் பெற்றுள்ளது.

ஊரடங்குவேளையில் கைத்துப்பாக்கிகள் மற்றும் வாள் போன்ற ஆயுதங்களுடன் வந்த திருடர்கள் வீட்டு உரிமையாளரை மிரட்டி கதவையும் திறக்கச் செய்துள்ளார்கள்.

கதவு திறக்கப்பட்டதும் வீட்டில் நுழைந்து அலுமாரிகள் மற்றும் இடங்களை சோதனையிட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பணம், வீட்டு பெண்மணியின் தாலிக்கொடி, நகைகள் மற்றும் இரவு வீட்டில் தங்கியிருந்த ஏனைய இரண்டு பெண்களுடைய நகைகள் என பல பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

திருடர்கள் போகும்போது பயமுறுத்தி விட்டு வீட்டில் இருந்த ஒருவரையும் தாக்கி காயப்படுத்திவிட்டுச் சென்றுள்ளார்கள்.

திருட்டுத் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. (202-86)

## 1990 இல் 401 பொலிஸார் கிழக்கில் கொலையானமை குறித்து ஆராய ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குக!

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஜூன் 27

கிழக்கு மாகாணத்தில் 1990ஆம் ஆண்டு 401 பொலிஸார் விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணை செய்து நீதி வழங்குவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் 1990ஆம் ஆண்டு காணாமற்போன 401 பொலிஸார் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என அரசு சிலவாரங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் விடுத்த வேண்டுகோளின் பின்னரே இந்த அறிவிப்பு வெளியானது.

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் மேலும் பலர் இது குறித்த விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தங்களுக்கு நஷ்டஈடு எதுவும் வழங்கப்படவில்லை. அவர்கள் கொல்லப்பட்டனர் என்று மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. அத்துடன் விசாரணை நடைபெறவுமில்லை எனவும் பாதிக்கப்பட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அப்போதைய அரசிடம் இது தொடர்பாக தங்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் அது புறக்கணிக்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸாவின் அரசு, விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னரே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றன.

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அப்போது முக்கிய அமைச்சராகப் பதவி வகித்தார்.

மேலும், அப்போதைய அரசு மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் பொலிஸாரை ஆயுதங்களைக் கையளித்து விட்டு சரணடையுமாறு உத்தரவிட்ட பின்னரே இந்தப் படுகொலைகள் இடம்பெற்றன.

ஆயுதங்களைக் கைவிட்டு சரணடையுமாறு உத்தரவிட்டது யார் எனப் பலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பான முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு நீதி வழங்குவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## சாவகச்சேரி நீதிமன்றில் குழந்தைகள் தத்து கொடுக்கப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்27

சாவகச்சேரி நீதிமன்றின் பொறுப்பில் இருந்த மூன்று பெண் குழந்தைகள் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் தத்துக் கொடுக்கப்பட்டன.

இக்குழந்தைகளைத் தத்துக் கொடுப்பதற்கு கடந்த 13ஆம் திகதி நடத்தப்பட்ட நேர்முகத்தேர்வில் தெரிவுசெய்யப்பட்ட பெற்றோரிடம் குழந்தைகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சிறுவர் நன்னடத்தை அலுவலர் கா.சிவகரன் கலந்துகொண்டார். (202-207)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 14 | 28.06.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: | தசமி |
| | மு.இ. 08.55 வரை |
| நட்சத்திரம் : | அச்சுவினி |
| | மு.இ. 08.14 வரை |
| சுபநேரம் : | 02.56 - 04.26 |
| ராகுகாலம் : | 08.56 - 10.26 |

## நிகழ்வுகள்

வலி.வடக்கு,ஜூன்27

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய தமிழ்மொழித் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக விவேகானந்தா பரீட்சை சபையின் முன்னாள் செயலாளர் சி.கந்தசாமி கலந்துகொள்வார்.

இந்தாண்டு இடம்பெற்ற தமிழ்த் தினப் போட்டியில், கோட்டம், வலயம் என்பவற்றில் வெற்றிகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் விசேடமாக இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இப்பாடசாலையில் தமிழ்மொழித் தினவிழா முதல் தடவையாக இடம் பெறுகின்றமை குறிப்பிடக்கூடியதாகும்.

பாடசாலை மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (202-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்27

சாவகச்சேரி பிரதேச சபைக்குட்பட்ட கச்சாய் பொதுநூலகத்தில் நூலக அபிவிருத்தி ஆலோசனைச் சபை நடத்தும் 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' என்னும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூலாசிரியர் கல்வயல் குமாரசாமி சிறப்புரை நிகழ்த்துவார். (202)

* * *

வலி.வடக்கு,ஜூன்27

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்தின் "பசுந்தோகை" நூல் வெளியீடு விவசாயபீட மாணவர் ஒன்றியத் தலைவர் தலைமையில் விவசாயபீட பிரதான மண்டபத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினராகப் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி சிவச்சந்திரனும் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக விவசாய உயிரியல் துறை தலைவர் கலாநிதி கு.மிகுந்தன், விலங்கு விஞ்ஞானத் துறைத் தலைவர் கலாநிதி செல்வி ஜே.சின்னையா, விவசாய இயந்திரவியல் துறை திருமதி து.மிகுந்தன், விவசாய இரசாயனவியல் துறைத் தலைவர் சி.வசந்தரூபா, உயிரியல் துறைத் தலைவர் திருமதி லோ.பிரதீபன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள். (202-86)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்27

மூலிகைகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று தெரிவுசெய்யப்பட்ட நான்கு பாடசாலைகளில நடத்தப்படவுள்ளன என்று கைதடி சித்த மருத்துவத் துறைத் தலைவர் திருமதி எஸ்.பஞ்சராஜா தெரிவித்துள்ளார்.

பயனுடைய மூலிகைகளை அழிவடையாது பாதுகாத்தல், மூலிகைகளில் இருந்து உச்சப் பயனைப் பெறுதல், குறித்த சில நோய்களை மூலிகைகளின் மூலம் குணப்படுத்தல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில் இக்கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

முதற்கட்டமாக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் முதலாவது கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING 2008

Thursday 17th July 2008
at 10:00 a.m.

**Chief Guest**
*Prof M.Nadarajasundaram,*
B.A.Economics (Banking) (Hon),
M.A.Economics (Banking),
Dip.B.Adm.
**Department of Management Studies, University of Jaffna.**

**Chairman**
*Ven.S.P.Nesakumar*
**Archdeacon of Jaffna**

Parents, Old Boys & Well - wishers
are cordially invited

**Principal, Staff & Students**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியையான
செல்வி சியாமளா சுப்பிரமணியம்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி சிவபாக்கியம் சுப்பிரமணியம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/மெலிஞ்சிமுனை றோ.க.த.க வித்தியாலயம், ஊர்காவற்றுறை.

## கண்ணீர் அஞ்சலி




எமது விவசாய ஆரம்ப ஆசானாகவும்
எமக்கு மேலதிகாரியாகவும் எமது
பணியின் முன்னேற்றத்திற்கும்
வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும்
வழிகாட்டியாக இருந்து ஓய்வுபெற்ற பிரதி
விவசாயப் பணிப்பாளர்
**கலாநிதி செல்லப்பா ஜெயரத்தினம்**
அவர்களின் மறைவையொட்டி துயருறும்
அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பலாலி வீதி,
திருநெல்வேலி
வடக்கு, யாழ்ப்பாணம்.*

த.சிவலோகநாதன் குடும்பம்
(ஓய்வுபெற்ற உ.வி.பணிப்பாளர்)

## 9ஆம் மாத நினைவஞ்சலி

மலர்வு
03 - 04 - 1978



உதிர்வு
27 - 09 - 2007

**செல்வன் கோபாலபிள்ளை சுபாஸ்கரன்**

மாதங்கள் மும்மூன்று மறைந்ததடா
மைந்தனே உந்தன் மலர்முகம் மறைந்து
ஆசையாய் அவனியிலே – ஆயிரம்
கனவுகளுடன் சிறகடித்துத் திரிந்தவனே
நெஞ்சில் எழுதிவைத்த உந்தன்
பசுமையான நினைவுகள் என்றும் உயிரோடு வாழும்.

*உன் நினைவுகளுடன்:*
**குடும்பத்தினர்.**
*11/1,திருவள்ளுவர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

*நடராஜா வீதி,
வேலணை மேற்கு,
வேலணை-08.*

## அன்னைக்கு எனது அஞ்சலிகள்

தமிழுக்கும் சமூகத்துக்கும்
அரும்பணியாற்றி இறைபதமெய்திய
கலாநிதி செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களுக்கு எனது இதயம் நெகிழ்ந்த
அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றேன்.
திருமதி றெஜினா இருதயநாதன்
*ஒய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாம வலயம்.*
(75808)

சுன்னாகம் பல நோ.கூ.சங்கம் (வ.து) சுன்னாகம்

## இதய அஞ்சலி



சமயப் பணியுடன்,
தமிழ்ப் பணியும்,
அறப்பணியும்
ஆற்றி அமரத்துவம்
அடைந்த
சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி
**தங்கம்மா
அப்பாக்குட்டி**
அவர்களின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

சுன்னாகம் பல
நோ.கூ.சங்கம்.

தலைவர்,
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
(அ/553508)

## சு.வேலுப்பிள்ளையின் நினைவு தினக் கூட்டம்

நாவற்குழி அறிவொளி மன்றமும் பொதுநிறுவனங்களும் இணைந்து நடத்தும் நாடறிந்த மூத்த எழுத்தாளர் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை (சு.வே) அமரத்துவம் அடைந்த ஓராண்டு நினைவு தினக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் செ.குமாரசாமி தலைமையில் நாவற்குழி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அரச நிறுவனங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் பலர் உரையாற்றவுள்ள இக் கூட்டத்தில் சைவப் புலவர் சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன், சு.வேயின் இலக்கியப்பணியும்வெளியீடுகளும் என்ற தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார். (3)

## கருத்தரங்கு பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்ஜூன்27

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பௌதீகவியல் துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவிருந்த கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. (202)

## விஞ்ஞானப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்ஜூன்27

யாழ்.வலய மாணவர்களுக்கான விஞ்ஞான வினாவிடைப் போட்டிகள் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுஇருந்தன. தவிர்க்க முடியாத காரணத்தால் இந்தப் போட்டி பிற்போடப் பட்டுள்ளதாக யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

போட்டி நடைபெறும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.
(202-302)

## Dr. பஸ்லுர் ரஹ்மான் (M.B.B.S, MD, PhD (Acu), M.V.) அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி

தமிழன் தொலைக்காட்சியில் இதுவரை ஞாயிறு தோறும் இரவு 11.00 மணிக்கு நடைபெற்ற Dr. பஸ்லூர் ரஹ்மான் அவர்களின் மருத்துவ நிகழ்ச்சி தற்போது வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மாற்றப்பட்டுள்ளது. இனிவரும் வெள்ளிக்கிழமைகளில் பல முக்கியமான ஆதார பூர்வமாக (தடுப்பூசி உட்பட) பல தகவல்களை, விரிவுரைகளை நிகழ்த்த இருக்கிறார். உங்களின் சந்தேகங்களை பின்வரும் தொலைபேசி எண், முகவரிகளோடு தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

தொலைபேசி: **00919840472736**
**00919840498898**
முகவரி:Dr. **பஸ்லூர் ரஹ்மான்**
No.: 17, க்ஸ்ரியன் பீச் றோட், சாந்தோம்,
**சென்னை 600004, இந்தியா.**
1.WWW.FOOLPROOFCURE NET
2.WWW.GOOGLE.COM.Then type "Iatrogenic"
Email:- dr Fazl @ g mail.com
(அ/553439)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



மண்ணில்
10-01-1966

விண்ணில்
01-01-2008

## திரு.தியாகராஜா மகேஸ்வரன்

[கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும்
முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்]

**சோகம் தீர்க்கீரோ சோதிமயமானவரே**

செல்லமான எங்கள் அப்பா சிரிக்கக்
கதைகள் சொல்லும் அப்பா பக்குவமாய்
அரவணைத்து பாசமுடன் வளர்த்த அப்பா
கட்டிமுத்தம் தந்திடும் கனிவான அப்பா
கனிவான தேவாரம் எம்முடன்காலை இசைக்கும் அப்பா
ஆறுமாதம் ஐயோ! எங்கள் கண்ணானப்பா
செல்லமாய் என்னைத் தூக்கி மகிழவில்லை
சிரித்துச் சிரித்துச் சேர்ந்து – விளையாடவில்லை
கடைக்குப் போகவில்லை கனபொருள் வாங்கவில்லை
எங்கள் அப்பா வீரனைக் காணாமல்
நானும் அழுகிறேன் வீடும் அழுகிறது
வேதனையால் வெந்து நொந்து துடிக்கிறேன்
சோதனையா? அப்பா சோதித்தது போதும்
பவித்திரா நான் பக்குவமாய் பாருமப்பா
பொன்னம்பலத்தில் தனித்து நின்றேனப்பா
தவித்துப் போனேனப்பா துடித்துப் போனேனப்பா
ஆறு மாதமும் அழுது நிற்கிறேன்
சோகம் தீர்க்கீரோ சோதிமயம் ஆனவரே.

*பவித்திரா மகேஸ்வரன்
(மகள்)*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி நிமிடக் 'கோல்' மூலம் இறுதிக்குள் ஜேர்மனி அணி




பாஸில், ஜூன் 27

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு ஜேர்மனி தகுதி பெற்றுள்ளது. நேற்றுமுன்தினம் நடந்த தொடரின் முதலாவது அரையிறுதிப் போட்டியில் துருக்கி அணியை 3-2 என்ற 'கோல்'ஏள கணக்கில் மூலம் வெற்றிகொண்டதையடுத்து ஜேர்மனி இறுதியாட்டத்துக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொண்டது.

ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் - 90 ஆவது நிமிடத்தில் பிலிப்லாம் அடித்த கோல், ஜேர்மனி அணிக்கு வெற்றியைப் பெற்றுக்கொடுத்திருந்தது.

'யூரோ கிண்ணம் - 2008' போட்டித் தொடர் சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் நடைபெற்றுவருகின்றது. இதில் ஜேர்மனி, துருக்கி, ஸ்பெயின், ரஷ்யா ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன. நேற்றுமுன்தினம் சுவிற்ஸர்லாந்தின் பாஸில் நகரில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் துருக்கி அணியுடன் ஜேர்மனி அணி பலப்பரீட்சை நடத்தியது.

இந்தப் போட்டியின் தொடக்கத்தில் துருக்கி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினார்கள். வலுவான ஜேர்மனிக்கு துடிப்பான ஆட்டம் ஆடிய துருக்கி அணி கடும் சவாலாக விளங்கியது. ஆட்டத்தின் 22ஆவது நிமிடத்தில் துருக்கி முதல் கோலைப் போட்டது. அந்த அணிக்காக உகுல் போரல் கோலை அடித்தார்.

எனினும், அடுத்த நான்கு நிமிடத்திலேயே ஜேர்மனி அணி பதில் கோலைப் போட்டது. பாஸ்ரின் கவெஸ்னெஸ்ரிக்கர் இந்தக் கோலைப் பெற்றுக்கொடுத்தார். முதல் பாதி ஆட்டம் 1-1 என்ற சமனிலையில் முடிவுற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் மிகவும் பரபரப்பாக இருந்தது. 79ஆவது நிமிடத்தில் ஜேர்மனி அணி தனது இரண்டாவது கோலைப் போட்டது. மிரோஸ்வல் குளோஸ் தலையால் முட்டி கோல் அடித்து 2-1 என்று ஜேர்மனிக்கு முன்னிலை பெற்றுக்கொடுத்தார்.

ஆட்டம் முடிய 11 நிமிடங்கள் இருந்ததால் ஜேர்மனி வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தில் ஈடுபட்டனர். ஆட்டம் முடிய 4 நிமிடங்கள் இருந்த போது (86ஆவது நிமிடம்), துருக்கி வீரர் செமித் சென்டிரிக் 2ஆவது கோலை அடித்து ஆட்டத்தை 2-2 என்ற கோல் கணக்கில் சமன்செய்தார்.

போட்டி 90ஆவது நிமிடத்தை நெருங்கிக்கொண்டிருந்த போது ஆட்டம் மேலதிக நேரத்திற்குச் செல்லும் என எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனால், யாருமே எதிர்பார்க்காத வகையில் ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் (90ஆவது நிமிடம்) ஜேர்மனி 3ஆவது கோலைப் போட்டது. பிலிப் லாம் அடித்த இந்தக் கோலால் ஜேர்மனி ரசிகர்கள் ஆரவாரம் அடைந்தனர். இறுதியில் ஜேர்மனி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

2ஆவது அரையிறுதியாட்டம் நேற்றிரவு ஆஸ்திரியத் தலைநகர் வியன்னாவில் ஸ்பெயின் - ரஷ்ய அணிகளுக்கிடையில் நடைபெறவிருந்தது. இந்தப் போட்டியில் வெற்றி பெறும் அணி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் இறுதியாட்டத்தில் ஜேர்மனி அணியை எதிர்கொள்ளும்.

1996ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஜேர்மனி அணி இறுதியாட்டத்திற்குத் தகுதிபெற்றுள்ளது. மூன்று முறை சம்பியன் பட்டம் வென்றுள்ள ஜேர்மனி அணி, நான்காவது பட்டத்தை எதிர்நோக்கி இறுதியாட்டத்தில் களம்காணவுள்ளது.

(சி)

# சங்ககார அபார சதம் அசத்தியது இலங்கை



லாகூர், ஜூன் 27

பாகிஸ்தானில் நடந்து வரும் ஆசியக் கிண்ணத் தொடரில் பங்களாதேஷுக்கு எதிரான லீக் போட்டியில் சங்ககார சுப்பர் சதம் கடக்க இலங்கை அணி 131 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தலாக வென்றது.

நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் இலங்கை, பங்களாதேஷ் மோதிய போட்டியில் முதலில் ஆடிய இலங்கை அணியின் தொடக்க வீரர்களான ஜெயசூரியா, சங்ககார ஆகியோர் பங்களாதேஷின் பந்துவீச்சை வெளுத்து வாங்கினார்கள். முதல் விக்கெட்டுக்காக 116 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் அதிரடியாக ஆடிய ஜெயசூரியா, 3 சிக்ஸர்கள் மற்றும் 10 பவுண்டரிகளுடன் 47 பந்துகளில் 72 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் அப்துர் ரசாக்கின் சுழலில் 'போல்ட்' ஆனார்.

அடுத்தவந்த அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன வெறும் 6 ஓட்டங்களுடன் அப்துர் ரசாக்கிடம் விக்கெட்டைப் பறிகொடுத்தார். தொடர்ந்து கப்புகெதரவுடன் இணைந்த சங்ககரா சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 91 பந்துகளில் 16 பவுண்டரிகளின் உதவியுடன் 101 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார்.

கப்புகெதராவின் அதிரடியில் இலங்கையின் ஓட்டஎண்ணிக்கை 'ஜெட்' வேகத்தில் உயர்ந்தது. கப்புகெதரா 74 ஓட்டங்களில் (67 பந்துகள், 2 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள்) ஆட்டமிழந்தார். சமரசில்வா(19) வேகமாக பெவிலியன் திரும்பினார்.

கடைசிக் கட்டத்தில் பங்களாதேஷின் சிறப்பான பந்துவீச்சில் சமிந்த வாஸ்(13), குலசேகரா(1), டில்சான்(29) அடுத்து அடுத்து ஆட்டமிழக்க இலங்கை அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 357 ஓட்டங்களை எடுத்தது.

இமாலய ஓட்டஎண்ணிக்கையை விரட்டிய பங்களாதேஷ் அணியினர் தொடக்கத்திலேயே இலங்கையணியின் வேகத்தில் விக்கெட்டுகளை இழக்க ஆரம்பித்தது. ரகீபுல் ஹசன், மஸ்பிகர் ரஹீம் ஆகியோர் ஓரளவுக்கு ஓட்டங்களைச் சேர்த்த போதும் அது வெற்றிக்குப் போதுமானதாக இல்லை. மஸ்பிகர்/ரஹீம்(44), ரகீபுல் ஹசன்(35) ஆகியோர் அதிகபட்சமாக ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களை மட்டுமே எடுத்துத் தோல்வியடைந்தது. இலங்கை அணியின் பந்துவீச்சில் முரளிதரன் 2 விக்கெட்டுகளையும், சமிந்த வாஸ், குலசேகர, டில்கார, ஜெயசூரியா, சமர சில்வா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக இலங்கையின் சங்ககார தேர்ந்து எடுக்கப்பட்டார்.

# கடைசிப் பந்தில் வெற்றியை கோட்டைவிட்ட இங்கிலாந்து

## 4ஆவது ஒருநாள் போட்டியில் வாகை சூடியது நியூஸிலாந்து

ஓவல், ஜூன் 27

இங்கிலாந்து அணிக்கு எதிரான நான்காவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து அணி கடைசிப் பந்தில் வெற்றியைச் சுவீகரித்தது. இதன் மூலம் தொடரில் 2-1 என்ற முன்னிலையை நியூஸிலாந்து பெற்றுக்கொண்டது.

246 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய நியூஸிலாந்து அணி கடைசிப் பந்தில் ஒரு விக்கெட் கைவசமிருக்க இரண்டு ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில், மார்க் கிலெஸ்பி சிறப்பாக ஆடி வெற்றியைப் பெற்றுக்கொடுத்தார். இங்கிலாந்துக் களத்தடுப்பாளர்களின் பொறுப்பற்ற செயற்பாட்டால் அவர்களின் வெற்றி பறிபோனது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய இங்கிலாந்து அணி ஆரம்ப வீரர் லூக்கி ரைற்றை 18 ஓட்டங்களுடன் மில்ஸின் வேகத்தில் இழந்தது. அடுத்தவந்த பீற்றர்ஸன் ஓட்டமெதுவும் எடுக்காமல் மார்க் கிலெஸ்பியின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த ரவி போபரா - இயன் பெல் ஜோடி சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தது. இயன் பெல் 46 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சௌத்தியின் பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். அணித்தலைவர் கொலிங்வூட் 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றார்.

அடுத்த வந்த ஒயிஸ் ஷா, களத்தில் நின்ற ரவி போபராவுடன் இணைந்து அபாரமாக ஆடினார். ரவி போபரா ஒருநாள் அரங்கில் தனது இரண்டாவது அரைச்சதத்தைப் பதிவு செய்து 58 ஓட்டங்களுடன் விக்கெட்டைப் பறிகொடுத்தார். ஒயிஸ் ஷா 71 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 63 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து 'ரன் அவுட்' ஆனார்.

பின்னர் வந்த வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டஎண்ணிக்கையுடன் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். கடைசியில் இங்கிலாந்து அணி 49.4 ஓவர்களில் 245 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. நியூஸிலாந்தின் பந்துவீச்சில் ரிம் சௌத்தி 3 விக்கெட்டுகளையும், கைல் மில்ஸ் மற்றும் மார்க் கிலெஸ்பி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

வெற்றியிலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. ஆரம்ப வீரர் பிரண்டன் மக்கியூலம் வெறும் ஓர் ஓட்டத்துடன் சைட்பொற்றமின் பந்துவீச்சில் சரணடைந்தார். தொடர்ந்து மிரட்டிய சைட்பொற்றம், அடுத்து வந்த றோஸ் ரெய்லரை 6 ஓட்டங்களுடன் வெளியேற்றினார். பொறுப்புடன் ஆடிய மற்றைய ஆரம்ப வீரரான ஜிம்மி கௌவ் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

நான்காவது வீரராகக் களமிறங்கிய ஸ்கொட் ஸ்ரைரிஸ் 69 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து 'ரன் அவுட்' முறையில் பவிலியன் திரும்பினார். பின்னர் வந்து வீரர்கள் ஓரளவு ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தனர்.

கடைசி இரண்டு ஓவர்களிலும் 12 ஓட்டங்கள் எடுத்தால் நியூஸிலாந்து வெற்றி என்ற நிலை காணப்பட்டது. ஒரு விக்கெட்தான் கைவசமிருந்தது. 49ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர் அடங்கலாக 9 ஓட்டங்கள் கிடைத்தன.

இதன்படி கடைசி ஓவரில் வெற்றிக்கு மூன்று ஓட்டங்கள் தேவைப்பட்டன. இங்கிலாந்தின் லூக்கி ரைற் அந்த ஓவரை வீசினார். முதல் பந்தில் கைல் மில்ஸ் ஓர் ஓட்டத்தைப் பெற்றுக்கொடுத்தார். அடுத்த நான்கு பந்துகளையும் ஓட்டம் எதுவும் கொடுக்காமல் துல்லியமாக வீசினார்.

கடைசிப் பந்தில் வெற்றிக்கு இரண்டு ஓட்டங்கள் தேவையாகவிருந்தன. அந்தப் பந்தை ஓங்கியடித்த லூக்கி ரைற்றினால் ஓர் ஓட்டத்தை மட்டுமே ஓட முடிந்தது. ஆனால், பந்தைத் துரத்திப் பிடித்து எறிந்த பொழுது ரவி போபரா அதைக் கைநழுவ விட நியூஸிலாந்து வெற்றிக்குத் தேவை யான மற்றைய ஓட்டத்தை ஓடி முடித்தது. இறுதியில் நியூஸிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற் றிக்குத் தேவையான 246 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது. ஆட்ட நாயகனாக ஸ்ரைரிஸ் தெரிவானார்.

# ஆவரங்காலில் வீட்டின் அருகேவைத்து இளைஞன் ஆயுததாரிகளால் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 27

புத்தூர் மேற்கு, ஆவரங்கால் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை துஷிதரன் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார்.

மரணம் குறித்து மல்லாகம்நீதிவான்திருமதி ச.இளங்கோவன் விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தாப இளைஞன் தமது வீட்டுக்குச் சமீபாக உள்ள ஒழுங்கையில் நின்ற வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதன் பிரகாரம் அச்சுவேலிப் பொலிஸாரால் யாழ்.போதனா வைத்திய சாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (01-203-78)

# யாழ்.நகரில் பாழடைந்த வீட்டில் இருந்து சுருக்கிட்ட நிலையில் இளைஞனின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ் ஐந்து சந்திக்கு சமீபமாக பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இ.வதீஸ்வரன் (வயது 21) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நபரின் சடலம் பாழடைந்த வீடு ஒன்றில் இருந்து கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப் பட்டது என்று பொலிஸார் நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்தனர்.

சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு யாழ்.மேலதிக நீதிவான் இ.வசந்தசேனன் உத்தரவிட்டார். (அ-01)

# பொருள்விநியோகம்; இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 27

ப.நோ.கூ.சங்க பொருள் விநியோகம் தொடர்பாக கலந்துரையாடல் இன்று பி.ப. 2 மணிக்கு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலுக்கு ப.நோ.கூ.சங்க தலைவர்களையும், பொதுமுகாமையாளர்களையும், கூட்டுறவு உதவி ஆணையாளரையும் கலந்து கொள்ளுமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (1)


## பகிரங்க ஏல விற்பனை- 2008

எதிர்வரும் 28.06.2008ஆம் திகதி சனிக்கிழமை பகல் 10மணிக்கு மல்லாகம் மாவட்ட/ நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாத சான்றுப் பொருள்களான துவிச்சக்கர வண்டிகள், நீர் இறைக்கும் மோட்டார்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளன. விற்பனை செய்யப்பட்ட பொருள்கள் எவையும் எக்காரணம் கொண்டும் இம் மன்றினால் மீளஏற்றுக் கொள்ளப்படமாட்டா

விற்கப்படும் பொருள்களுக்கு உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவில் இருந்து அப்புறப்படுத்தப்படவேண்டும் என்பதுவும், பொருள்களை கொள்வனவு செய்பவர் தமது அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண் டும் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

பதிவாளர்.

அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் தோலகட்டி பானங்கள்

மக்களின் நன்மதிப்பு பெற்ற தோலகட்டி ஆச்சிரம துறவிகளின் சிறந்த தயாரிப்பான

- நெல்லி ரசம்
- நன்னாரி ரசம்
- முந்திரிகை ரசம்
- தோடம்பழ ரசம்

மற்றும் முந்திரிகை வைன் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

அருள் ஆச்சிரமம்,
இல.05, கோவில் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே- 021-222 3351

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசரிஸ்,
K.K.S.வீதி, யாழ்ப்பாணம். (சி/553512)

## கணக்காளர் தேவை

கீழ்வரும் தகைமைகளையுடையோர் விண்ணப்பிக்கவும்.

- G.C.E உயர்தரத்தில் வணிகத்துறையில் சித்தி
- சம்பந்தப்பட்ட தொழிலில் வேறு நிறுவனங்களில் பணியாற்றிய முன் அனுபவம்.
- வயதெல்லை 35-55 வயதிற்கு இடைப்பட்டிருத்தல், தொழில் சம்பந்தமாக எம்மால் ஏற்றுக் கொள்ளக்கூடிய முன் அனுபவம் உடையோருக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

தகைமையுடையோர் நேரில் வரவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்கு மாணவர் பேரணி; புகைக்குண்டு ஏவப்பட்டு 9 மாணவர்கள் கைது! 5 பேர் காயமுற்றனர்!!

கொழும்பு,ஜூன்.27

பௌத்த பல்கலைக் கழகத்தில் மாணவர் விடுதி முன்னறிவித்தல் இன்றி திடீரென மூடப்பட்டது எனக் குறிப்பிட்டு அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிக்கு மாணவர்கள் நேற்று கொழும்பில் நடத்திய பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசித் தாக்குதல் நடத்தினர்.

நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் கொழும்பு விகாரமாதேவி பூங்கா முன்பாகக் கூடிய ஆயிரத்துக்கு மேற்பட்ட பிக்கு மாணவர்கள் தங்களின் மாணவர் விடுதியைத் திறக்கக் கோரி அலரி மாளிகையை நோக்கி பேரணியொன்று செல்ல முயன்றனர்.

அவர்களை அங்கு செல்ல விடாமல் பொலிஸார் பொது நூலக சுற்று வட்டத்திற்கு அருகில் வைத்துத் தடுத்து நிறுத்தினர்.

பொலிஸாரின் தடையும் மீறி அவர்கள் தொடர்ந்து செல்ல முற்படுகையில், அலரி மாளிகையை நோக்கிச் செல்லாது விகாரமகாதேவி பூங்காவிற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்துமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டனர்.

ஆனால், மாணவர்கள் பொலிஸாரின் சொல்லை மீறி பேரணியைத் தொடர்ந்தனர். இதனால் பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைக் குண்டுகளை ஏவி அவர்களைக் கலைத்தனர். (அ-சி)

## தமிழ்த்தின விழா

சுன்னாகம், ஜூன் 27

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் தமிழ்த்தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெறவுள்ளது. (01-38)

## அரச களஞ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாளர்களைப் செயலகத்தில் வழங்கற் கட்ட ளைகளைப் பெற்று பொருள்களை களஞ் சியத்தில் வாங்குமாறு அரச அதிபர் கேட் டுள்ளார்.

விற்பனை செய்யப்படவுள்ள பொருள்களின் விலைகள் பின்வருமாறு:

அரிசிதீட்டல்/உடையல்- கிலோ 57 ரூபா 50சதம், 62ரூபா, 64ரூபா.

பருப்பு(சிவப்பு)- கிலோ 138ரூபா, பருப்பு(மஞ்சல்) 118ரூபா 50சதம்.

## ஆரம்பதின நிகழ்வு

கரவெட்டி, ஜூன் 27

வதிரி இருதயக் கல்லூரி தனது ஆரம்ப தினத்தை இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்குபாடசாலைபிரதானமண்டபத்தில் கொண்டாடுகின்றது.

அதிபர் விகணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் விழாவிற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கலந்து கொள்கிறார். (1-70)

## சிப்பாய் சுட்டுத் தற்கொலை

அல்லைப்பிட்டி பகுதியில் பணியில் இருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஆறுமாத காலத்துக்கு முன்னர் பணியில் இணைந்த கொண்ட கல்கடுவைச் சேர்ந்த 23வயதான சிப்பாயே தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது மரணம் தொடர்பாக ஊர்காவற்றுரை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் விசாரணை நடத்தினார். சடலத்தை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் உப்படைக்குமாறு நீதிவான் உத்தர விட்டார்.

## ஐ.ஓ.சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலை 110 ரூபாவாக விற்கப்படும் என்று அந்த நிறுவனத்தின் முகாமைத்து வப் பணிப்பாளர் கே. ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## மகேஸ்வரன் நினைவாக இன்று அன்னதானம்

ஐ.தே.கவின் கொழும்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் தி.மகேஸ்வரனின் 6ஆம் மாத நினைவுதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் இன்று வெள்ளிக்கிழமை மூன்று இடங்களில் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலய அறப்பணி நிலையம், நல்லூர் துர்க்கா மணி மண்டபம் மற்றும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமம் ஆகிய இடங்களிலேயே இந்த அன்னதானம் வழங்கப்படுகிறது. (அ-02)

## ஊரடங்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊரடங்கு நேரத்தில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் வழமையான நேரத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# இலங்கை - இந்திய உறவு மிகப் பலமான நிலையில்!

## =கொழும்பு அரசு தெளிவுபடுத்துகின்றது=

கொழும்பு, ஜூன் 27

வரலாற்றில்என்றுமில்லாதவாறுஇலங்கை - இந்திய உறவு மிகப் பலமான நிலையில் உள்ளது என்றும் இந்த உறவை யாரும் தப்பான கண்கொண்டு பார்க்கக்கூடாது என்றும் அரசு கூறியுள்ளது.

இலங்கையின் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக இந்தியா இலங்கைக்கு எந்தவித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை என்று தெரிவிக்கும் அரசு, இலங்கையில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறு கின்ற போதிலும் பேச்சு மூலமான அரசி யல் தீர்வின் ஊடாகவேயன்றி, யுத்தத்தால் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்ற ஒரே நிலைப்பாட்டில் இரு நாடுகளும் உள்ளன என்றும் அரசு தெரிவித்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பவே இதனைக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினை தொடர்பாக இந்திய உயர்மட்டத்தினர் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர் என்று கூறினர்.

இந்தக் குற்றச்சாட்டுகளில் எந்த உண்மையும் கிடையாது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்லுறவு நிலவி வருகிறது. அந்த உறவை மேலும் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஒன்றாகவே இந்திய அரசியல் தலைவர்களின் இலங்கை விஜயம் அமைந்திருந்தது.

ஜே.வி.பி. குற்றம் சுமத்துவதுபோல் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பில் இந்தியா எந்தவிதமான அழுத்தத்தையும் இலங்கை மீது பிரயோகிக்கவில்லை.

அமைதிப் பேச்சு மூலமான அரசியல் தீர்வுத் திட்டத்தின் ஊடாகவே தேசியப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் இந்தியா உள்ளது. அதற்காக இதைத்தான் செய்யவேண்டும் என்று இந்தியா, இலங்கை மீது எந்த அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை.

யுத்தம் மூலம் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பது உண்மை. ஆனால், இப்போது இடம்பெறுவது யுத்தமல்ல. அப்பாவித் தமிழர்களை புலிகளின் பயங்கரவாதப் பிடியில் இருந்து மீட்டெடுக்கும் அரசின் மனிதாபிமான நடவடிக்கைதான் யுத்தம் போல் தெரிகிறது. (சி)

## கற்பித்தல் கண்காட்சி

கோப்பாய், ஜூன் 27

அச்செழு சைவப் பிரகாச வித்தியாலய கற்றல்கற்பித்தல்உபகரணக்கண்காட்சிஇன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு பாடசாலை அதிபர் S.வேலழகன் தலைமையில் நடை பெறும்.

இந்த நிகழ்வில் ஆரம்பக் கல்வி கண்காட்சியை யாழ்.வலய ஆரம்பக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசனும், இடைநிலைக் கல்வி கண்காட்சியை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.வி.குணசேகரமும் ஆரம்பித்து வைப்பார்கள். (1-72)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்குகளில் இருந்தும் முதலில் தாக்குதல், பின்னர் விசாரணை என்ற நடைமுறை பின்பற்றப்படுவது வெளிப்பட்டுள்ளது.

இலங்கையில் சித்திரவதை நடைமுறை பரந்துபட்டளவில் காணப்படுவது குறித்து சர்வதேச மட்டத்தில் தெரிய வந்தால் அது அரசியல் ரீதியாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கருதி சித்திரவதை குறித்த விசாரணைகளை மேற்கொள்வதே அரசியல் ரீதியாக தடுக்கப்படுகின்றது.

மேலும் இவ்வாறான விசாரணை அரச கட்டமைப்புகளின் மீது மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் கருதப்படுகின்றது.

எனினும், குற்றங்களைத் தடுப்பதற்கு, தவிர்க்க முடியாத வழிமுறையாக சித்திரவதையை ஊக்குவிப்பதும் அதேவேளை சித்திரவதை குறித்து விசாரிப்பதும் ஒன்றுக்கொன்று முரணான விடயங்களாகும்.

இலங்கையைச் கடந்த 60 வருடங்களாக ஆண்ட அரசுகளில் எதுவும் பொலிஸ் மற்றும் விசாரணைப் பிரிவுகளில் காணப்பட்ட இந்த நடைமுறையை முடிவிற்குக் கொண்டுவர முயலவில்லை.

சிறைக்காவலர்களுக்கான போட்டிப் பரீட்சை விசேட வழிகாட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்- 28.06.2008 சனி 3pm மேலதிக நேரம் அலுவலகத்தில் பெறலாம்.
திகழ் கல்வி நிறுவனம் கே.கே.எஸ். வீதி இணுவில்

மாறாக, சகல அரசுகளும் இதனை ஊக்கு வித்ததுடன் இதிலிருந்து தமக்கு சாத கமான நிலையைப்பெறவும்முயன்றன - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (சி)

## இப்போது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமுகமாகத் தீர்த்துவைக்க முடியும். யுத்தம் மூலமாக அல்ல - என்ற நிலைப் பாட்டில் இந்தியாவும் இலங்கையும் தெளி வாகவே உள்ளன.

தற்போது வடக்கில் இடம்பெறுவது புலிகளின் பிடியிலிருந்து அப்பாவித் தமிழ் மக்களை மீட்கும் - புலிகளின் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் - மனிதாபிமான நடவடிக்கைதான். அது யுத்தமே அல்ல.

எனவே, இங்கு ஒரு பெரிய யுத்தம் நடப்பது போலவும், அந்த யுத்தத்தை நிறுத்த இந்திய அரசு இலங்கை மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றது என்பது போலவும் வீண் வாதம் பேசுவதில் அர்த்தம் இல்லை.

புலிகள் பயங்கரவாதத்தைக் கைவிடும் வரை அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும். அவை நிறுத்தப்படமாட்டா.

- இப்படி அந்தச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் யாப்பா மேலும் தெரிவித்தார். - (சி)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொல்லப்பட்டனர். 24 படையினர் காயமடைந்த னர் என்றும் புலிகள் மேலும் தெரிவித்திருக்கின்றனர்.

இதேவேளை, படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர், புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்குப்பகுதியிலுள்ள பெரிய மடுப்பகுதியைத்தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## இந்திய உயர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது என்றார்.

### சமஷ்டி நாடாக மாற்ற இந்தியா முயல்கின்றது

இந்தச் சந்திப்பின் போது என்ன விடயம் குறித்து ஆராயப்பட்டது என்பதை அறியும் உரிமை இலங்கை மக்களுக்கு உள்ளது. இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு குறித்து ஜே.வி.பி. ஏற்கனவே பல தடவைகள் எச்சரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடமிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டாமென புதுடில்லி கொழும்பிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றது.

அபிவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடுதல் என்ற போர்வையில் கிழக்கு மாகாணத்தில் நிலத்தைக் கைப் பற்றப் புதுடில்லி முயல்கின்றது என அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கையை சமஷ்டி நாடாக மாற்ற இந்தியா முயல் கின்றது. நாட்டின் ஒற்றையாட்சி முறையைப் பாதுகாப்பார் எனச் சத்தியப்பிரமாணம் செய்தஜனாதிபதிக்கு, மக்களின்ஆணைக்கு எதிராகச்செயற்படும் உரிமையில்லை. இவ்வாறான முயற்சிகளை உடனடியாக மக்களுடன்இணைந்து ஜே.வி.பி. முறியடிக்கும் என்றும் - அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-உ)

## கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுடன் நாளை காலை யாழ் ரயில் நிலையத் தடிக்குச் சமூகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

முன்னர் அறிவித்தபடி இன்று கப்பல் சேவைஇடம் பெற மாட்டாது என்றும் அரச அதிபர் நேற்றுத் தெரிவித்தார். (அ-01)

## மகேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் விடுதலை செய்தார்.

மகேஸ்வரனின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபருக்கு எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார் என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் நீதிமன்றுக்கு அறிவித்திருக்கின்றனர். (சி)

## ஐ.தே.க.வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரகசியமான அந்த விவரங்களைத் தற்போது வெளியிடமுடியாது என்றும் கூறினார்.

அக்கட்சிக்குள் உள் முரண்பாடு உச்சத்துக்குச் சென்றுள்ளது. இதன் காரணமாக அக்கட்சியில் இருந்து பலர் அரசுடன் இணையத் தீர்மானம் எடுத்துள்ளனர்.

அது தொடர்பான பேச்சு தற்போது இடம்பெற்று வருவதால் இவ்வாறு அரசுத் தரப்பில் புதிதாக இணையவுள்ளவர்களின் பெயர் விவரங்களைத் தற்போது சொல்ல முடியாது. அது ஒரு பரம இரகசியம்- என்றார். (அ-சி)

**இலங்கை மின்சார சபை- யாழ் பிரதேச அலுவலகம்**

**மின் தடைபற்றிய அறிவித்தல்**

கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள மின்பிறப்பாக்கிகள் காங்கேசன்துறையில் இருந்து சுன்னாகத்துக்கு காங்கேசன்துறை வீதி வழியாக எடுத்துச் செல்லும் போது வீதிக்கு குறுக்காக அமைந்திருக்கும் மின் வடங்கள் அகற்றப்பட வேண்டியுள்ளதால் அந்தப் பகுதியில் இன்று (27.06.2008) தொடக்கம் தொடர்ந்து 5நாட்கள் காலை 6மணி தொடக்கம் மாலை 6மணிவரை மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளருக்கு அறியத் தருகிறோம்.

இதனால் மின் பாவனையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களிற்கு மனம் வருந்துகின்றோம்.

பிரதேச மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை,
யாழ் பிரதேச அலுவலகம், சுன்னாகம்.

சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளிற்கு கைகொடுக்கும் இலங்கை மின்சார சபை

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமானது நாளை (28.06.2008) சனிக்கிழமை இந்து இளைஞர் சங்கப் பணிமனையில் காலை 9மணியளவில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை ஏற்று சகல அங்கத்தவர்களும் தவறாமல் சமூகமளித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர்.

## அறிவித்தல்

எமது கல்லூரியில் நாளை மறுதினம் (29.06.2008) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த கலைவிழா நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும். ஆதவாளர்கள் அனைவரும் இந்தறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தலைவர்

பாடசாலை அபிவிருத்திச்சங்கம், யா/இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### தம்பு சண்முகம்

கீரிமலையை வசிப்பிடமாகக் கொண்ட தம்பு சண்முகம் நேற்று (26.06.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் தங்கமலர், ராசமலர், நடராசா, ஆனந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2008) வெள்ளிக்கிழமை பி.ப 2மணிக்கு சித்தன்கேணியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*கீரிமலை வீதி,*
*சித்தன் கேணி.*

தகவல்:
மனைவி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org